உ

# நவராத்திரி வழிபாடும் தோத்திரப் பாடல்களும்



வெளியீடு : இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நவராத்திரி வழிபாடும் தோத்திரப் பாடல்களும்



வெளியீடு :

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

248, 1/1, காலி வீதி,

கொழும்பு - 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புத் தரவுகள்

நூல் : நவராத்திரி வழிபாடும் தோத்திரப் பாடல்களும்
(இலவச வெளியீடு)

பதிப்பு : ஆகஸ்ட் 2006

பக்கங்கள்: 110

பிரதிகள் : 5000

வெளியீடு : இந்து சமய கராசார அலுவல்கள் திணைக்களம்
248, 1/1, காலி வீதி, கொழும்பு – 4.

அச்சுப் பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
48B, புளூமென்டால் றோட்,
கொழும்பு –13.

## BIBLIOGRAPHICAL DATA

Title : **Navarathiri Vazhlipadum Thothira Padalkalum**
(Free Issue)

First Edition : August 2006

Pages : 114

Copies : 5000

Published By: Dept of Hindu Religious and Cultural Affairs
248, 1/1, Galle Road, Colombo - 4.

Printed By : Unie Arts (Pvt) Ltd.
48B, Bloemendhal Road,
Colombo-13.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

சனாதன தர்மமெனச் சிறப்பிக்கப்படும் இந்துமதம் ஆழங்காண முடியாத பெரும் ஆழி. முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாக விளங்கும் ஒரு வாழ்வியல் நெறி. இந்து இலக்கியங்கள் அனைத்துமே மற உணர்வு மங்கி அற உணர்வு அவனியிலே தழைத்தோங்க வேண்டுமென்ற தத்துவத்தையே எடுத்துக்கூறுகின்றன.

இந்துமதத்தைப் பொறுத்தவரை பன்னிரண்டு மாதங்களுமே விழாக்களும், விரதங்களும், பண்டிகைகளும் நிறைந்ததாக விளங்குகின்றன. உழைத்துக் களைத்துச் சலிப்படைந்து போகும் மனித மனங்களுக்கு புத்துணர்வு ஊட்டவும், அவர்கள் செம்மையடைந்து வாழ்வில் உயரவும், உறவுகள் விருத்தியடையவும், சமூக ஒற்றுமையுடன் கலை உணர்வும் கலாசாரமும் உயர்ச்சியடையவும் இந்துப் பண்டிகைகள் உதவுகின்றன.

சக்தி விரதங்களில் ஒன்றாக விளங்குவது நவராத்திரியாகும். இது வீரம் தரும் துர்க்கையையும், செல்வம் தரும் இலக்குமியையும், கல்வி தரும் சரஸ்வதியையும் நோக்கி ஒன்பது இரவுகள் அனுஷ்டிக்கப் படுவது. இம்மூன்று செல்வங்களும் ஒன்றில் ஒன்று தங்கியது; மனித வாழ்வுக்கு அடிப்படையாக விளங்குவது. இச்செல்வங்களை வேண்டி வீடுகள், பாடசாலைகள், வேலைத்தலங்கள், கலைபயில் நிலையங்கள் போன்ற அனைத்து இடங்களிலும்நவராத்திரி விழாவாகக் கொண்டாடப் படுகின்றது. இத்தினங்களில் கொலு வைத்தல், கும்பம் வைத்தல், அலங்கரித்தல், பூசை பக்திப்பாடல்கள் பாடுதல் போன்றவை முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி தினங்களில் படிக்கத்தக்க தோத்திரப் பாடல்களை "நவராத்திரி வழிபாடும் தோத்திரப் பாடல்களும்" எனும் பெயரில் பாமாலையாகத் தொகுத்துள்ளோம். இப்பாமாலை அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் உதவும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இந்நூலின் பாடல்களைத் தொகுப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியுதவிய திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் அவர்களுக்கும், இப்பாடல்களைத் தொகுத்த ஆராய்ச்சிப்பிரிவின் உத்தியோகத்தர்களான திருமதி. நித்தியவதி நித்தியானந்தன், திருமதி தேவகுமாரி ஹரன், செல்வி க. ஹேமலோஜினி ஆகியோருக்கும், இந்நூலை ஒப்பீடு செய்துதவிய தகவல் மற்றும் மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் திரு. ம. சண்முகநாதன் அவர்களுக்கும், அழகிய வடிவில் அச்சேற்றித்தந்த யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

*சாந்தி நாவுக்கரசன்*
*பணிப்பாளர்,*
*இந்து சமய அலுவல்கள் திணைக்களம்.*
06.09.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்தி கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அஷ்டலக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி வழிபாடு

ஒவ்வோராண்டும் புரட்டாதி மாதம் வருகின்ற பூர்வபட்ஷ பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள ஒன்பது தினங்கள் நவராத்திரி தினங்களாகும். நவராத்திரி நாட்களான ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் கிரியா சக்தியான அன்னை துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் இச்சா சக்தியான திருமகளையும், இறுதி மூன்று நாட்கள் ஞான சக்தியான கலைமகளையும் வேண்டி வழிபட வேண்டும் என சாஸ்த்திரங்கள் சொல்கின்றன.

உலகின் முக்கிய தேவையான ஞானம், செல்வம், வீரம் இவை மூன்றும் பெற்றுச் சிறந்திட முப்பெருந் தேவியரையும் மும்மூன்று நாட்கள் முறைப்படுத்தி, வேண்டி வழிபட்டாலும் மூன்று சக்தியரும் ஒன்றான ஆதிசக்தியே எனக் கருதி சக்தியின் ஒன்பது ரூபங்களையும் ஒன்பது நாட்களிலும் வழிபடுவது இன்னும் சிறப்பாகும்.

நவராத்திரியின் சிறப்பம்சமாக பெண் குழந்தைகளில் பத்து வயதுக்குட்பட்ட ஒன்பது குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களை நாளொன்றுக்கு ஒருவராக நீராட்டி, புத்தாடை அணிவித்து அவர்களை தேவியாக நினைத்து வணங்க வேண்டும். இதுபோல் ஒன்பது நாட்களும் அன்னைக்குகந்த பிரசாதங்களை, சித்ரான்னங்களைப் படைத்து வழிபடுவதும் சிறப்பாகும். ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் வீட்டில் வைத்திருக்கும் கொலு முன்பாக, திருவிளக்கேற்றி அம்மன் படம் வைத்து அன்னையின் திருமுன் அமர்ந்து பக்திப் பாடல்கள் பாடி முறைப்படி வழிபட வேண்டும்.

முதல் நாள் அம்பிகையை குமாரி வடிவமாக அலங்கரித்து மல்லிகை மலர்ச் சூடி வெண்பொங்கல் படைத்து வணங்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் நாளில் இராஜராஜேஸ்வரியாக அம்மனை வழிபட வேண்டும். மல்லிகை, துளசி சாற்றி, புளியோதரை படைத்து அம்மனை வழிபடலாம்.

மூன்றாம் நாள் அம்பிகையை கல்யாணியாக வழிபட வேண்டும். சம்பங்கி, மரிக்கொழுந்து போன்றவற்றால் அன்னையை அலங்கரித்து சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்யலாம்.

ரோகினி தேவியாக அம்மனை வழிபடும் நாள் நான்காம் நாளாகும். ஜாதி மல்லிப் பூச்சூடி, கதம்பசாதம் படைத்து அம்மனை வழிபடலாம்.

ஐந்தாம் நாளன்று காளிகா தேவியாய்ப் பாவித்து அம்மனுக்கு பாரிஜாத மலர் சூடி, தயிர்ச்சாதம் படைத்து வழிபட வேண்டும்.

6ம் நாளில் சண்டிகா தேவியாய் தேவியை வழிபட வேண்டும். இந்நாளில் செம்பருத்திப் பூவோடு தேங்காய்ச் சாதம் படைத்து அம்மன் அருள் பெறலாம்.

7ஆம் நாளில் தேவிக்கு தாழம்பூ மாலை போட்டு, எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து அன்னபூரணியாய் வழிபடுதல் வேண்டும்.

எட்டாம் நாள் அஷ்டதேவிகளுடன் எழுந்தருளும் துர்க்கையாய் அம்மனைப் போற்ற வேண்டும். ரோஜாப்பூ சாற்றி, பாயாசம் படைத்து வழிபட வேண்டும்.

9ம் நாள் காமேசுவரி எனும் சிவசக்தி கோலத்தில் அம்மனை சுபத்திரா தேவியாகப் பாவித்து செந்தாமரை மலரால் அர்ச்சித்து திரட்டுப்பால் நிவேதனம் செய்து பூஜிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலு வைத்தல்

*கொ*லு வைப்பது நவராத்திரி நாட்களின் சிறப்பம்சமாகும். பஞ்ச பூதங்களுள் ஒன்றான மண்ணினால் சிலை செய்து, அதில் அம்மனை எழுந்தருளச் செய்து வழிபட்டால் அன்னையின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும் என தேவி புராணம் கூறுகிறது. மார்க்கண்டேய புராணத்தில் மகாராஜ சுரதா என்பவன் தன் குருவின் ஆலோசனைப்படி காளி ரூபத்தை மண்ணில் செய்து வழிபட்டு அருள் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

இதனை உணர்த்தும் விதமாகவே கொலுக் காட்சியில் அனைத்து அம்மன் பொம்மைகளையும் முறைப்படி அடுக்கி வைத்து பூஜிக்கிறோம். கொலு வைப்பவர்கள் புரட்டாசியில் வரும் அமாவாசை நாளில் கொலு வைக்கும் முன்பு வீட்டை சுத்தமாக்கி, அழகிய கோலங்கள் போட வேண்டும். பின் மேடை அமைத்து பொம்மைகளை வரிசைப்படுத்த வேண்டும். 5, 7, 9, படிகள் அமைத்து கொலு வைக்கலாம்.

முதல் படியில் புல்,செடி, கொடி ஆகிய தாவர பொம்மைகளை வைக்கலாம். 2ம் படியில் நத்தை போன்ற பொம்மை வைப்பது நலம் பயக்கும். நத்தை போல மெதுவாக நிதானமாகச் சென்று உயர் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று உறுதி கொள்வதே இதன் பொருள்.

மூன்றாம் படியில் எறும்பு, கறையான் புற்று பொம்மைகளை வைக்க வேண்டும். எறும்பைப்போல சுறுசுறுப்பு, எத்தனை முறை தகர்த்தாலும் கறையான் திரும்பத் திரும்ப புற்றைக் கட்டுவது போன்ற திட மனப்பான்மை வேண்டி பொம்மைகளை அடுக்கவேண்டும்.

நான்காம் படியில் நண்டு, வண்டு பொம்மைகள் இடம்பெற வேண்டும். இவற்றின் குணம் ஆழமாகி ஊடுருவி பார்ப்பது. எந்த விஷயத்தையும் ஆழமாகச் சிந்தித்து செயலாற்றுவதை இந்த பொம்மைகள் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் படியில் மிருகங்கள், பறவைகள் பொம்மைகள் வைக்க வேண்டும். மிருக குணத்தை விட வேண்டும். பறவை போல கூடி வாழ வேண்டும் என்பதே இதன் பொருள்.

ஆறாம் படியில் மனித பொம்மைகள் வைக்க வேண்டும். வாழ்க்கையில் மேற்கண்ட ஐந்து படிகளில் உள்ளது போன்ற குணங்களைக் கடைப்பிடித்தால் முழு மனிதன் என்ற அந்தஸ்தைப் பெறலாம்.

ஏழாம் படியில் முனிவர்கள், மகான்கள் பொம்மைகளை வைக்க வேண்டும். மனிதன் உரிய பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்தால் மகான்கள் ஆகலாம் என்பதே இதன் பொருள்.

எட்டாம் படியில் தெய்வங்களுக்கு கீழ் ஸ்தானத்தில் இருக்கும் தேவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், நவக்கிரகங்களின் பொம்மைகளை வைக்க வேண்டும். முனிவர் மகான் நிலையை அடையும் மனிதன் தெய்வ நிலைக்கு உயர்வதை இது காட்டுகிறது.

ஒன்பதாம் படியில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் தங்கள் தேவியரான சரஸ்வதி, லட்சுமி, பார்வதியுடன் இருக்க வேண்டும். ஆதிபராசக்தி சிலையை நடுவில் பெரிய அளவில் வைக்க வேண்டும். உயிர்கள் தங்கள் நிலையை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி தெய்வமாக வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவதோடு முதல் படியில் தாவரங்களையும் அடுத்தடுத்த படிகளில் சிற்றுயிர்கள், மனித பொம்மைகள், இறுதியில் தெய்வ பொம்மைகள் என அமையும் கொலுக் காட்சி, உயிர்களின் பரிணாம தத்துவத்தையும் உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுரனை அழிக்க துர்க்கையாய்த் தோன்றிய திருநாள்

அதர்மம் அழிந்து தர்மம் வென்று செழிக்க வேண்டும் என உணர்த்தும் தெய்வத் திருவிழாக்களுள் நவராத்திரியும் ஒன்று. அம்பிகைக்குரிய நவராத்திரி ஒரு வருடத்தில் நான்கு வகை நவராத்திரியாகக் கொண்டாடப்படும் என சமயச் சான்றோர்கள் கூறுவர்.

நவராத்திரியிலும் நான்கு வகை உண்டு. ஆனி மாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை ஆஷாட நவராத்திரி என்றும், புரட்டாசி மாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை சாரதா நவராத்திரி என்றும், தை மாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்கள் மகா நவராத்திரி என்றும், பங்குனி மாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை வசந்த நவராத்திரி என்றும் கூறுவர்.

இவற்றுள் புரட்டாசி மாத நவராத்திரிக்கு மிகுந்த மகிமை உண்டு. புரட்டாசி நவராத்திரியான சாரதா நவராத்திரியின் மகிமையையும், கொண்டாடும் நியதிகளையும் நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது சிறப்பாகும்.

## மகிஷாசுர வதம்

பெரும் ஆற்றல் பெற்றிருந்த மகிஷாசுரன் சாகாவரம் வேண்டி தவம் இருந்து பிரம்மனை வேண்டினான். ஆனால் மரணம் எல்லோர்க்கும் உண்டு. அதை மாற்ற இயலாது அல்லவா? எனவே வேறு வரம் வேண்டக் கூறினார் பிரம்மன். மகிடனும் ஒரு கன்னிகையைத் தவிர வேறு எவராலும் தனக்கு மரணம் நிகழக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வரம் பெற்றான். வரம் பெற்ற அசுரன் அனைத்துலகையும் ஆட்டிப் படைத்தான். அவன் கொடுமைகளை தடுக்க முடியாது மும்மூர்த்திகளுமே கலங்கினர்.

இறுதியில் அனைவரும் கூடி அன்னையை வேண்ட, அம்பிகை சத்வ, தமோ, ரஜோ என முக்குணங்களும் கொண்டு அற்புத ஆற்றல் மிக்க துர்க்கையாய் புரட்டாசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் அவதரித்து ஒன்பது நாட்கள் விரதமிருந்து சுக்லபட்ச அஷ்டமியில் அசுரனை வதம் செய்தாள். நவமியில் அன்னையை அனைவரும் வெற்றித் திருமகளாய்க் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இப்படி அன்னை அசுரனை அழிக்க துர்க்கையாய்த் தோன்றிய திருநாளில் நவராத்திரி ஆரம்பமாகிறது. அன்னை அசுரனை அழித்து வெற்றி கொண்டதைக் கொண்டாடும் பொருட்டே இறுதி நாளன்று விஜயதசமி கொண்டாடப்படுகிறது.

## நவராத்திரி மகிமைக்கு இன்னொரு காரணம்

அதாவது புதனுக்குரிய ராசியான கன்னியில் புரட்டாசி மாதத்தில் சூரியன் பிரவேசிக்கும் காலமான தேவியை வழிபடுவது மிகவும் சிறப்பானதாகும். எனவே இப்புண்ணிய காலத்தில் நவராத்திரிகளில் நவக்கிரக நாயகியை வழிபடுகிறோம்.

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ட ஐஸ்வரியங்களை அருளும் திருமகள்

கஜேந்திர மோட்சக் கதை ஒன்று உண்டு. கஜேந்திரன் எனும் யானை பகவானை பூஜிக்க மலர் பறிக்கச் சென்ற இடத்தில், ஆற்று நீரில் முதலை வாயில் அகப்பட்டுக் கொண்டபோது, "ஆதி மூலமே காப்பாற்று" என்று பிளிறியது. 'ஆதி மூலமே' என யானை அழைத்தது யாரை? பிரம்மா தான் இல்லை என்றார். சிவபெருமானும் திகைத்து நின்றார். ஸ்ரீமத் நாராயணனோ ஆதிமூலமென்று கஜேந்திரன் அழைத்தது யாராக இருக்கும் என சிறிது யோசித்தார். மும்மூர்த்திகளும் இப்படி யோசித்திருக்க, திருமாலின் கரத்தில் இருந்த சக்கரம் சுழல ஆரம்பித்தது. விண்ணில் சுழன்று, மண்ணில் இறங்கி முதலை வாயிலிருந்து யானையைக் காப்பாற்றியது.

கஜேந்திர மோட்சத்தை அளித்த அந்தச் சக்கரமே ஸ்ரீ சக்கரமாகும். இங்கு 'ஸ்ரீ' என்பது சாட்சாத் மகாலட்சுமியையே குறிப்பதாகும். அவள் தான் ஆதிக்கும் ஆதியானவளாம். ஸ்ரீ என்பதை தூய தமிழில் 'திரு' என்போம். திருமகளை மார்பில் உடையவன் என்பதால்தான் பெருமாள் திருமாலாக வணங்கப்படுகிறார்.

அழகும், பிரகாசமும் கொண்ட திருமகளை பகவானாகிய ஸ்ரீமத் – நாராயணனே வைகுண்டத்தில் வைத்துப் பூஜிப்பதாகச் சொல்வார். பிரம்மனும், சிவனும் கூட தேவியை வழிபடுவதாக ஸ்ரீ பற்றிய புராணங்கள் கூறுகின்றன. கேதாரன், நீலன், நளன், கபிலன், துருவன், இந்திரன், பலி காசியப்பர், தட்சன், மனு, சூரியன், சந்திரன், குபேரன், வாயு, அக்கினி, வருணன் என தேவாதி தேவர்களும் வழிபடும் இந்தத் திருமகளையே புனிதமான நவராத்திரி காலங்களில் விஜயலட்சுமியாக வழிபட வேண்டுமாம். எல்லோரும் விரும்பும் பொன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை மட்டுமல்ல அஷ்ட ஐஸ்வரியங்களுக்கும் ஆதாரமான வீரமும், விவேகமும் எல்லாவற்றிலும் ஜெயமும் தரவல்லவள் திருமகள் ஆதலால் விஜயலட்சுமியாக போற்றப்பெறுகிறாள்.

நவராத்திரி நாட்களில் புரட்டாசி, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி ஆகிய திதி நாட்கள் விஜயலட்சுமிக்கு மிக உகந்த திருநாட்கள் ஆகும். இந்த மங்கள நாட்களில் செந்தாமரை, செவ்வரலி, ரோஜா, செண்பகப்பூ, செம்பருத்தி, கதம்பம் ஆகியவைகளால் லட்சுமியை அர்ச்சித்து பூஜிக்கலாம். இந்த நாட்களில் தேவிக்கு சர்க்கரைப் பொங்கல், கற்கண்டு, சாதம், பாயாசம், பஞ்சாமிர்தம் போன்றவற்றை நிவேதனமாகப் படைத்து அஷ்ட லட்சுமி ஸ்தோத்திரங்கள் சொல்லி வழிபடலாம்.

நவராத்திரி ஒன்பது நாட்களில் நடுவில் வரும் மூன்று நாட்கள் இப்படி திருமகளை முறைப்படி பக்தியுடன் பூஜிப்பதோடு, திருக்கோயிலில் பெருமாளோடு கொலு வீற்றிருக்கும் தாயாரையும் தரிசித்து வந்தால் அஷ்ட ஐஸ்வரியங்களையும் குறைவறப் பெற்றுச் சிறப்படையலாம்.

❊ ❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் அம்சம் சரஸ்வதி

ஆதியில் படைப்புக் கடவுளாகிய பிரம்மன் தோன்றிய போது, அப்பிரம்மனுக்குத் துணைவியாக தன் ஒரு கூறைச் சரஸ்வதி என்னும் பெண் சக்தியாக அளித்தாள் பராசக்தி. அந்த பிரம்ம சக்தியே சரஸ்வதி தேவியாய் வெள்ளாடை அணிந்து, வெண்தாமரையில் அமர்ந்து, தன் நான்கு திருக்கரங்களில் அட்சமாலை, வியாக்யான முத்திரை, ஓலைச்சுவடி, கமண்டலம் ஏந்தி, கல்வியின் நாயகியாய் அருள்பாலிக்கிறாள். அவள் கையில் உள்ள வீணை எப்போதும் பிரணவ கீதத்தை இசைத்துக் கொண்டிருக்கும் என்பர்.

இவளே, ஞானிகளின் பரிபக்குவத்திற்கு ஏற்ப வாகீசுவரி, வித்யாசாரதா, நீல சரஸ்வதி என்ற அநேக வடிவங்களைத் தாங்கி அருள் புரிகிறாள் என்றும் சொல்வர். சிவநேசச் செல்வர்களோ கலைவாணியை வேறு விதமாகப் போற்றுவர்.

## ஆகம சரஸ்வதி

சைவம் – சிவபெருமானின் பேரறிவாக வெளிப்பட்ட ஆகமங்களின் வடிவாகத் திகழும் ஆகம சுந்தரி என்றும், ஆகமச் செல்வி என்றும் ஞான சரஸ்வதி என்றும் கலைவாணியைப் போற்றி மகிழ்கின்றது.

ஆம்! சிவஞானம் அன்பர்களுக்கு அருள் புரிய ஒரு பெண் தேவதையாக உருக்கொண்டு வரும்போது ஞான சரஸ்வதி என்ற பெயர் பெறுகின்றது. இவள் பிரம்மதேவனின் சக்தியாகத் திகழும் வாணி சரஸ்வதியினின்று வேறானவள் என்பதைத் தம் பாடல்களால் தெளிவுபடுத்துகின்றது திருமந்திரம்.

சிவாகம சரஸ்வதி சொரூபமான இவள், சிவ ஆகமங்கள் எழுதப்பட்ட ஏடுகளை ஏந்தி முக்கண்களைக் கொண்டவளாகிய பார்வதி ஞான சரஸ்வதியாக வீற்றிருக்கின்றாள். அவளுடைய திருமேனி தூய படிகம் போன்ற வெண்மையுடன் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வெண்தாமரையில் வீற்றிருந்தவாறு ஓயாது திருமுறையாகிய ஆகமங்களை ஓதிக்கொண்டே இருக்கின்றாள் எனச் சொல்கிறது திருமந்திரம். இந்த ஞான சரஸ்வதி சிவபெருமானிடமிருந்து வெளிப்படும் ஞானப் பெண்ணாதலின் அவரைப் போலவே ஜடாமகுடம் தரித்து, அதில் பிறைச் சந்திரனைச் சூட்டியுள்ளாள். ஸ்ரீ தத்துவநிதி முதலிய நூல்கள், அமுதக் கலசம் என்பவற்றை ஏந்தியுள்ளாள்.

கங்கை கொண்ட சோழபுரம், வேதாரணியம், கூத்தனூர், காஞ்சி, தஞ்சை ஆகிய ஆலயங்களில் அமைந்துள்ள சரஸ்வதி திருவுருவங்கள் ஞான சரஸ்வதி திருவுருவங்களேயாகும்.

கலைவாணியின் தோற்றம் குறித்து வைணவப் பெரியவர்கள் 'இவள் பாற்கடலில் தோன்றிய பொக்கிஷம்' எனக் கூறுவர்.

அதாவது பாற்கடலில் அமிர்தம் வேண்டி தேவர்கள் அசுரர்களோடு சேர்ந்து கடைந்தபோது, முதலில் ஆலகால விஷம் தோன்ற அதை சிவன் பருகினார். பிறகு பாற்கடலில் அமிர்தத்தோடு தன்வந்திரி, உச்சை சிரவசு எனும் குதிரை, கௌத்துவமணி, அரிச்சந்தனம், கற்பகம், மந்தாரம், சந்தானம், பாரிசாதம் எனும் மரங்கள், ஐராவதம் எனும் யானை, காமதேனு பசு, சிந்தாமணி, சங்க நிதி, பதும நிதி போன்ற அரியப் பொருட்களும் தோன்றி உரியவரைச் சென்றடைந்தன. இதன் பின் சரஸ்வதி தோன்றி பிரம்மனையும், இந்திராணி தோன்றி இந்திரனையும், மகாலட்சுமி தோன்றி மகாவிஷ்ணுவையும் கரம்பிடித்தார்கள்.

இங்ஙனம் பாற்கடலில் தோன்றிய உயர்ந்த செல்வங்களுள் சரஸ்வதியும் ஒன்றாகப் போற்றப் பெறுகிறாள்.

## சரஸ்வதி பண்டாரம் – சரஸ்வதி கணத்தார்

முந்தைய நாட்களில் சிவாலயங்களில் இருந்த நூலகங்கள் சரஸ்வதி பண்டாரம் என்று அழைக்கப்பட்டன. சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்தில் இத்தகைய சரஸ்வதி பண்டாரம் இருந்ததைக் கல்வெட்டால் அறியலாம். சரஸ்வதியை வழிபடுபவர்கள் சரஸ்வதி கணத்தார் எனப்படுவர். காசியிலுள்ள அரசு நூலகம் சரஸ்வதி பவனம் என்று அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதிக்குரிய வெள்ளை உடையும் ஜபமாலையும்

**ச**ரஸ்வதி தேவிக்கு மட்டும் வெள்ளை உடை, ஜபமாலை, ஜடாமகுடம் ஆகியவை இருப்பது ஏன்?

சரஸ்வதி ஞான வடிவானவள், ஞானம் இருக்கிற இடத்தில் அடக்கமும் இருக்கும். மருந்தோடு பத்தியமும் முக்கியம். வித்யை என்ற மருந்துதான் புறத்துக்கு நல்லது செய்யும். உள்ளத்துக்கு வலிமை தரும்.

வித்யை என்ற மருந்துக்கு அடக்கம், விநயம் என்கிற பத்தியமும் அவசியம். இப்போது அது இல்லாததால் மருந்தே விஷமாக ஆகியிருக்கிறது. ஆனால் அடக்கத்துடன் பயின்றால் வித்தையே உண்மையில் ஞானம் தரும் அமிர்தமாகும். அதனால்தான் ஞான மூர்த்திகளான தட்சிணாமூர்த்தி, சரசுவதி இரண்டு பேரையுமே வித்யா தேவதைகளாகவும் வைத்திருக்கிறார்கள்.

பேச்சு, காரியம், அறிவது எல்லாம் அடங்கிப் போன நிலையில் இருக்கிற தட்சிணாமூர்த்தியே மேதா தட்சிணாமூர்த்தியாகிப் பெரிய புத்திப் பிரகாசம், வாக்கு வன்மை, வித்வசக்தி எல்லாம் தருகிறார்.

சரஸ்வதி, தட்சிணாமூர்த்தி இருவருமே அக்ஷரமாலை, சுவடி இவற்றோடு சந்திரகலையைத் தலையில் தரித்திருக்கிறார்கள். அதற்குப் பெயரே கலை. வித்தைக்கு முடிவே இல்லை. "கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு" என்று சரஸ்வதியே விநயத்துடன் நினைக்கிறாளாம். இவள் தலையில் வைத்திருப்பது மூன்றாம் பிறை. அது பூரண சந்திரனாக வளர வேண்டும்.

சரஸ்வதிக்கும் தட்சிணாமூர்த்தியைப் போலவே நெற்றிக்கண் உண்டு. ஆசை பஸ்பமானாலொழிய ஞானமில்லை. அதற்காகத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமனை எரித்த நெற்றிக்கண் சரஸ்வதியிடமும் இருக்கிறது. இந்த இரண்டு தெய்வங்களுக்கும் ஜடாமகுடம் இருக்கிறது. அதுவும் ஞானிகளின் அடையாளம். இருவருமே வெள்ளை வெளேரென்று இருக்கிறார்கள். ஏழு வர்ணங்களில் சேராத வெள்ளை பரம நிர்மலமான சுத்த சத்து நிலையைக் குறிப்பிடுகிறது. இந்த வெள்ளையும் கூட இன்னும் நிர்மலமான தன் வழியே ஒளி ஊடுருவிச் செல்கிற அளவுக்குத் தெளிந்து விடுகிறபோது ஸ்படிகமாகி விடுகிறது. தட்சிணாமூர்த்தி, சரஸ்வதி இருவருமே இப்படிப்பட்ட ஸ்படிகத்தால் ஆன அக்ஷர மாலையைத்தான் வைத்திருக்கிறார்கள். வெள்ளை நிறம், சந்திரக் கலை, ஸ்படிக மாலை, ஜடா மகுடம் ஆகியவற்றை நினைத்தாலே நமக்கு ஒரு தூய்மை, சாந்தி, அமைதி எல்லாமே உண்டாகின்றன.

## சரஸ்வதி பூஜை செய்வது எப்படி?

முதலில் வீட்டை நன்றாகக் கழுவிக் கோலங்கள் இட்டு அழகுபடுத்த வேண்டும். பின்னர் வீட்டில் உள்ள சரஸ்வதி படம் அல்லது பொம்மைகளைப் பிரதானமாக எடுத்து மனை மேல் வைத்தல் வேண்டும். படத்தின் முன்னால் கோலம் போட்ட பலகையை வைத்து, அதன் மேல் புத்தகங்களை அடுக்கி வைக்க வேண்டும். வீட்டில் உள்ள மாணவர்கள் தங்கள் பாடப்புத்தகங்களை எடுத்து பூஜையில் வைக்க வேண்டும். இனி அன்னையின் திருவுரு, புத்தகங்களுக்கு முன்பாக வாழையிலை விரித்து அதில் நைவேத்தியப் பட்சணங்களைப் படைத்தல் வேண்டும். எதற்கும் விநாயகரே முழு முதலானவர். எனவே மஞ்சளில் பிள்ளையார் பிடித்து பூஜையில் வைத்து வணங்கிய பின்னரே சரஸ்வதிக்கான பூஜையை ஆரம்பித்தல் வேண்டும்.

சரஸ்வதி பூஜையன்று "துர்க்கா லட்சுமி சரஸ்வதீப் யோ நம" என்று பூஜையை ஆரம்பிப்பது நன்று. பூஜையின் போது வீட்டில் உள்ள குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரும் கலைவாணிக்குரிய பாடல்களைப் பாடி வணங்கலாம். சகலகலா வல்லி மாலை பாடல்களைப் பாராயணம் செய்யலாம். சரஸ்வதி பூஜைக்கு அடுத்த நாள் விஜயதசமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதம் என்பதன் உண்மையான பயனை உணர்த்தத்தான் ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது எனலாம். உயிர்ப்பொருட்கள், உயிரற்ற பொருட்கள் அனைத்திலும் இறைவன் உறைந்துள்ளான். அனைத்தும் இறைவனில் உறைந்துள்ளது. வாழ்வில் நம் உயர்வுக்கு உதவும் ஆயுதங்களைப் போற்றும் விதம், அவற்றையும் இறை பொருளாகப் பாவித்து வணங்குவதே ஆயுத பூஜை எனவும் சொல்லலாம்.

ஆயுத பூஜையன்று சிறிய கரண்டி முதல் தொழில் இயந்திரங்கள் வரை எல்லா வகைத் தொழில் உபகரணங்கயைும் கழுவி சுத்தமாகத் துடைத்து, தேவையெனில் வர்ணம் தீட்டி எண்ணெய் பொட்டு வைத்து பூஜைகள் செய்து அவற்றுக்கு ஓய்வு கொடுப்பதும், பிறகு எடுத்துத் தொழிலுக்குப் பயன்படுத்துவதும் ஆயுத பூஜையின் சிறப்பம்சமாகும்.

## சரஸ்வதி நதி மூலம்

சரஸ்வதி தேவியைப் போன்றே பெரும் புனிதமாகப் போற்றப்படுவது சரஸ்வதி நதி. இதன் கதை வருமாறு :-

இறை கட்டளைப்படி கலைமகளைப் படைத்த பிரம்மன், அவள் அழகைக் கண்டு மையல் கொண்டான். பிரம்மனின் காதலை உணந்த கலைமகள் பெண்மான் உருவெடுத்து பாய்ந்து ஓடினாள். பிரம்மனும் ஆண் மான் உருக்கொண்டு அவளைப் பின்தொடர்ந்தார். இருவரையும் சிவபெருமான் இடைமறித்து அவர்கள் இருவரையும் மணம் முடித்துக்கொள்ளப் பணித்தார். இருவரும் மணந்து கொண்டார்கள். பிறகு பிரம்மன் சிவனை நோக்கி யாகம் வளர்த்தார். தன்னை நீக்கி யாகம் செய்ததால் சீற்றம் கொண்ட சரஸ்வதி, பிரம்மனின் யாகத்தை அழிக்கும் பொருட்டு சரஸ்வதி நதியாகப் பிரவகித்தாள் என்பர்.

## மயில்வாகினி சரஸ்வதி

சரஸ்வதியை வேத நூல்கள் அன்னத்தின் மீது பவனி வருபவளாகக் கூறுகின்றன. தென்னகத்தில் அவள் மயிலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடையவளாகக் காட்டப்படுகின்றாள். அவள் மயில் மீது வரும் சொரூபம் – ஆயிரம் கண்களாலும் நாம் அறிவைப் பெற்று வரவேண்டும் என்பதை உணர்த்துகிறதாம். ஜைன நூல்களும் மயிலையே அவளது வாகனமாகக் கருதி கலைவாணியை வர்ஹிவாகினி என்று போற்றுகின்றன.

## சாஸ்திரம் போற்றும் சரஸ்வதி

சரஸ்வதி தேவி – தலையில் வசினவாக் தேவதையாகவும், நெற்றியில் காமேச்வரியாகவும், புருவ மத்தியில் மோதினியாகவும், கழுத்தில் விமலாவாகவும், இருதயத்தில் அருணாவாக் தேவதையாகவும், நாபியில் ஜயினியாகவும், மர்மஸ்தானத்தில் சர்வேஸ்வரியாகவும், மூலாதாரத்தில் கவுளினியாகவும் வியாபித்திருக்கிறாள் என சாஸ்த்திர நூல்கள் கூறுகின்றன.

## வேத நாயகி கலைவாணி

வேதங்களில் புகழப்படும் பல தெய்வங்களுள் முக்கியமானவள் சரஸ்வதி. வாக்தேவி என வேத மந்திரங்கள் போற்றும் தேவியானவள் துதிகளின் வடிவமாக இடா என்ற பெயரிலும், ஞான வடிவில் சரஸ்வதி என்ற பெயரிலும், அறிவு விளக்கமாக பாரதி என்ற பெயரிலும் விளங்குகிறாள் என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளது. சரஸ்வதியின் முகம் பிரம்மவித்தை என்று வர்ணிப்பார்கள். ரிக், யஜுர், சாமம், அதர்வண வேதங்களே சரஸ்வதியின் நான்கு கைகளாகும். எண்ணும் எழுத்தும் கலைமகளின் இரு கண்கள். சங்கீத சாகித்யம் கலைமகளின் தனங்கள், இதிகாசங்கள் அவளது திருப்பாதங்கள், சரஸ்வதியின் யாழ் ஓம்காரம் எனும் சர்வசித்தி மந்திரமாகும்.

## இத்தகு தேவியை போற்றும் விதம்,

*"சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபணி*
*வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர்பவதுமேஸ்தா"*

இந்தக் கலைவாணி மந்திரத்தை சரஸ்வதி பூஜை அன்று மட்டுமல்லாது தினமும் பாராயணம் செய்து தேவியைத் தொழுதால் கல்வியில் தேர்ச்சி, கலைகளில் வளர்ச்சி கண்டு வாழ்வாங்கு வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதசமி

பாண்டவர்கள் அஞ்ஞான வாசத்தின்போது யாருக்கும் தெரியாமல் வள்ளிமரத்தின் பொந்தினுள் தங்கள் ஆயுதங்களை ஒளித்து வைத்தார்கள். அவர்களின் அஞ்ஞான வாசம் முடிந்ததும் தசமி அன்று தேவியை வழிபட்டு மறைத்து வைத்திருந்த தங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். விஜயம் அதாவது வெற்றி தரும் தசமி என்பதாலும் அர்ச்சுனனான விஜயனால் பக்தியுடன் பூஜிக்கப்பட்டதாலும் இது விஜயதசமி என்று பெயர் பெற்றது என்பார்கள். மேலும் இதனை விஜய நவராத்திரி என்றும், வன்னி நவராத்திரி என்றும், வனதுர்க்கா நவராத்திரி என்றும் அழைப்பார்கள். இராமர் வனவாசத்தின் போது அவர் மனைவி சீதாதேவியை ராவணன் கடத்திச்சென்றான். சீதையைப் பிரிந்த சோகத்திலிருந்தது இராமனை நாரதர் சந்தித்து அவர் துயர் நீங்க நவராத்திரி விரதம் கடைப்பிடித்தால் ராவணனை எளிதில் வெல்லலாம் என்று யோசனை கூறினார். நாரதர் சொன்னதுபோல் ராமபிரான் நவராத்திரி விரதம் இருந்தார். இராமர் வனத்தில் செய்த பூஜையை வன்ய நவராத்திரி என்பர்.

இராமர் சக்தியை வழிபட்டு ராவணனை விஜயதசமியான பத்தாவது நாளில் தான் வென்றார் என்று புராணம் கூறும். மேலும் தருமத்தின் வடிவமான தர்மரும், தனது மாங்கல்ய பலம் குறையாமல் இருக்க சாவித்திரியும் இதைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். கண்ணபிரானும் பிருந்தாவனத்தில் நவராத்திரி விரதம் கடைப்பிடித்து பூஜைகள் செய்து அன்னையின் அருள் பெற்றதாகப் புராண வரலாறுகள் கூறுகின்றன.

கர்நாடக மாநிலத்தில் நவராத்திரி விழாவை பத்து நாள் விழாவாக தசரா என்ற பெயரில் கொண்டாடுகிறார்கள். மைசூரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமுண்டீஸ்வரி தேவி கோவிலில் பத்தாவது நாள் விஜயதசமி அன்று மிகப் பெரிய நகர்வலம் நடைபெறும்.

வங்காளத்தில் துர்க்கா பூஜை கொண்டாடப்படும் நவராத்திரி விழாவில் மிகப்பெரிய காளி சிலைகளைப் பூஜித்து பத்தாவது நாளான விஜயதசமி அன்று அந்தச் சிலைகளை கடலில் விடுகின்றார்கள்.

டெல்லியில் ராம நாடகத்துடன் நவராத்திரி ராமலீலா விழாவாகத் தொடங்கிப் பத்தாவது நாளான விஜயதசமி அன்று ராவணன், கும்பகர்ணன் ஆகிய உருவ பொம்மைகள் மீது ராமனின் வில்லில் இருந்து தீக் கொளுத்தப்பட்ட அம்பு மூலம் எய்து ராவண சங்காரம் கொண்டாடுகிறார்கள்.

இதே போல் ராஜஸ்தான், காசி, மகாராஷ்டிராவில் ராம லீலாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆந்திராவில் ஒன்பது நாட்கள் நவராத்திரி விழாக் கொண்டாடி, பத்தாவது நாளான விஜயதசமி அன்று ஆயுதங்களையும் இசைக் கருவிகளையும் பூஜையில் வைத்து வழிபடுகிறார்கள்.

எனவே விஜயதசமி அன்று அம்பாளை வழிபட்டுத் தொடங்கும் அனைத்துக் காரியங்களும் வெற்றியடையும் என்பதால் அம்பாளை வழிபட்டுப் பேறுகள் பல பெற்று வளமுடன் வாழ்வோமாக.

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரிப் பாட்டு !

சரணம் சரணம்

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவ நின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுஹ சரணம் சரணம்
சிலைமலி யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலை வறு மொருபரை சரணம் சரணம்
உமை சிவயம்பிகை சரணம் சரணம்!

# ஸ்ரீ தேவீ நமனம்!

(ராகம் - பேஹாக்)

ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்த – ஸாதிகே !
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்து தே ||

ஸ்ருஷ்டி – ஸ்திதி – விநாசானாம் சக்திபூதே ஸநாதனி !
குணாச்ரயே குணமயே நாராயணி நமோஸ்துதே ||

சரணாகத – தீனார்த்த – பரித்ராண – பராயணே !
ஸர்வஸ்யார்த்தி – ஹரே தேவி நாராயணி நமோஸ்துதே ||

ஜய நாராயணி நமோஸ்து தே ||
ஜய நாராயணி நமோஸ்து தே ||
ஜய நாராயணி நமோஸ்து தே ||

–ஸ்ரீ தேவீ மஹாத்ம்யம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *நவராத்திரிப் பாட்டு!*

பராசக்தி

(மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி)

மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்
ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதா யினும்வழிநீ சொல்வாய்; எமதுயிரே,
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே. 1

## *வாணி*

வாணி கலைத்தெய்வம், மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே. 2

## *ஸ்ரீ தேவி*

பொன்னரசி, நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீ தேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே. 3

## *பார்வதி*

மலையிலே தான்பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி யுலகக் கனல்வளர்ப்பாள்
நிலையி லுயர்ந்திடுவாள், நேரே யவள்பாதந்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே. 4

**– மகாகவி பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசக்தி புகழ்!

*ராகம் - தன்யாஸி, சதுஸ்ர ஏகம்*

சக்திசக்தி சக்தியென்று சொல்லு – கெட்ட
சஞ்சலங்கள் யாவினையுங் கொல்லு –
சக்திசக்தி சக்தியென்று சொல்லி – அவள்
சந்நிதியி லேதொழுது நில்லு.

சக்திமிசை பாடல்பல பாடு – ஓம்
சக்திசக்தி யென்றுதாளம் போடு
சக்திதருஞ் செய்கைநிலந் தனிலே – சிவ
சக்திவெற்றி கொண்டுகளித் தாடு.

சக்திதனை யேசரணங் கொள்ளு – என்றும்
சாவினுக்கொ ரச்சமில்லை தள்ளு –
சக்திபுக ழாமமுதை யள்ளு – மதி
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு.

சக்திசெயும் புதுமைகள் பேசு – நல்ல
சக்தியற்ற பேடிகளை யேசு –
சக்திதிருக் கோயிலுள்ள மாக்கி – அவள்
தந்திடுநற் குங்குமத்தைப் பூசு

சக்தியினைச் சேர்ந்ததிந்தச் செய்கை – இதைச்
சார்ந்துநிற்ப தேநமக்கொ ருய்கை –
சக்தியெனு மின்பமுள்ள பொய்கை – அதில்
தண்ணமுத மாரிநித்தம் பெய்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திசக்தி சக்தியென்று நாட்டு – சிவ
சக்தியருள் பூமிதனில் காட்டு
சக்திபெற்ற நல்லநிலை நிற்பார் – புவிச்
சாதிகளெல் லாமதனைக் கேட்டு.

சக்திசக்தி சக்தியென்று முழங்கு – அவள்
தந்திரமெல் லாமுலகில் வழங்கு
சக்தியருள் கூடிவிடு மாயின் – உயிர்
சந்ததமும் வாழுநல்ல கிழங்கு.

சக்திசெயுந் தொழில்களை யெண்ணு – நித்தஞ்
சக்தியுள்ள தொழில்பல பண்ணு
சக்திதனை யேயிழந்து விட்டால் – இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு.

சக்தியரு ளாலுலகி லேறு – ஒரு
சங்கடம்வந் தாலிரண்டு கூறு
சக்திசில சோதனைகள் செய்தால் – அவள்
தண்ணருளென் றேமனது தேறு.

சக்திதுணை யென்றுநம்பி வாழ்த்து – சிவ
சக்திதனை யேயகத்தி லாழ்த்து
சக்தியுஞ் சிறப்புமிகப் பெறுவாய் – சிவ
சக்தியருள் வாழ்கவென்று வாழ்த்து.

*–மகாகவி பாரதியார்*

❊ ❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளிப் பாட்டு!

யாது மாகி நின்றாய் – காளீ !
எங்கும்நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் – நின்றன்
செயல்களன்றி யில்லை
போது மிங்கு மாந்தர் – வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி, தாயே – என்மீ
தருள்புரிந்து காப்பாய். 1

எந்த நாளு நின்மேல் – தாயே
இசைகள்பாடி வாழ்வேன்
கந்த னைப்ப யந்தாய் – தாயே
கருணைவெள்ள மானாய் !
மந்த மாரு தத்தில் – வானில்
மலையினுச்சி மீதில்,
சிந்தை யெங்கு செல்லும் – அங்குன்
செம்மைதோன்று மன்றே! 2

கர்ம யோக மொன்றே – உலகில்
காக்குமென்னும் வேதம்;
தர்ம நீதி சிறிதும் – இங்கே
தவறலென்ப தின்றி
மர்ம மான பொருளாம் – நின்றன்
மலரடிக்க ணெஞ்சம் –
செம்மை யுற்று நாளும் – சேர்ந்தே
தேசுகூட வேண்டும். 3

என்ற னுள்ள வெளியில் – ஞானத்
திரவியேற வேண்டும்
குன்ற மொத்த தோளும் – மேருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலமொத்த வடிவும்
நன்றை நாடு மனமும் –
நாளுமீதல் வேண்டும்
ஒன்றை விட்டு மற்றோர் – துயரில்
உழலுநெஞ்சம் வேண்டா. 4

வான கத்தி னொளியைக் – கண்டே
மனமகிழ்ச்சி பொங்கி
யானெ தற்கு மஞ்சேன் – ஆகி
எந்தநாளும் வாழ்வேன்.
ஞான மொத்த தம்மா – உவமை
நானுரைக்கொ ணாதாம் –
வான கத்தி லொளியின் – அழகை
வாழ்த்துமாறி யாதோ. 5

ஞாயி றென்ற கோளம் – தருமோர்
நல்லபேரொ ளிக்கே
தேயமீ தொருவமை – எவரே
தேடியோத வல்லார்?
வாயினிக்குமம்மா – அழகாம்
மதியினின்ப ஒளியை
நேய மோடு ரைத்தால் – ஆங்கே
நெஞ்சிளக்க மெய்தும். 6

காளி மீது நெஞ்சம் – என்றும்
கலந்துநிற்க வேண்டும்
வேளை யொத்த விறலும் – பாரில்
வேந்தரேத்து புகழும் –
யாளி யொத்த வலியும் – என்றும்
இன்பநிற்கு மனமும் –
வாழி யீதல் வேண்டும் – அன்னாய்,
வாழ் கநின்றன் அருளே. 7

*– மகாகவி பாரதியார்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சக்தியின் அம்சங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹிஷாசுர மர்த்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி நிலம் !

*இராகம் - திஸ்ர ஏகம்* *தாளம் - ஆதி*

காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும் – அடி
தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்
காணி நிலத்திடையே – ஓர்மாளிகை
கட்டித்தர வேண்டும் – அங்குக்
கேணி அருகினிலே – தென்னைமரம்
கீற்றும் இளநீரும், 1

பத்துப் பனிரெண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும் – நல்ல
முத்துச் சுடர்போல – நிலாவொளி
முன்பு வரவேணும்; அங்குக்
கத்துங் குயில் ஓசை – சற்றேவந்து
காதில்பட வேணும்; என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே – நன்றாய்இளந்
தென்றல் வரவேணும்! 2

பாட்டுக் கலந்திடவே – அங்கே ஒரு
பத்தினிப் பெண்வேணும்; – எங்கள்
கூட்டுக்களியினிலே – கவிதைகள்
கொண்டுதர வேணும் – அந்தக்
காட்டு வெளியினிலே – அம்மா, நின்றன்
காவலுற வேணும்; – என்றன்
பாட்டுத்திறத்தாலே – இவ்வையத்தைப்
பாலித்திடவேணும் ! 3

*– மகாகவி பாரதியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாது மாகி நின்றாய் !

யாது மாகி நின்றாய் – காளீ
எங்கும் நீநி றைந்தாய் ;
தீது நன்மை யெல்லாம் – காளீ
தெய்வ லீலை அன்றோ?
பூத மைந்தும் ஆனாய் – காளீ
பொறிகள் ஐந்தும் ஆனாய்
போத மாகி நின்றாய் – காளீ
பொறிக ளைக்க டந்தாய்.!

இன்ப மாகி விட்டாய் – காளீ
என்னு ளேபு குந்தாய்;
பின்பு நின்னை யல்லால்
பிறிது நானும் உண்டோ?
அன்பு தந்து விட்டாய் – காளீ
ஆண்மை தந்து விட்டாய்
துன்பம் நீக்கி விட்டாய் – காளீ
துயர ழித்து விட்டாய்.!

– மகாகவி பாரதியார்

❁❁❁

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி சக்தி வாழ்கவே!

உண்மை யென்றுணர்ந்த நெஞ்சில் !
ஓடி வந்து நிற்பவள்
நன்மை செய்பவர்களுக்கு
ஞான தீபம் ஆனவள்
மென்மையான பண்பினோடு
மேவும் அன்புக் காவியம்
பன்மை ஒன்றும் பாங்கில் வந்த
பாரின் அன்னை வாழ்கவே!

வேண்டும் என்னும் வேட்கை தோன்றில்
வேடிக்கைகள் செய்பவள்
பூண்ட வெண்மை செம்மை தன்னில்
பொய்மை மாய்த்து நிற்பவள்
"காண்டி" என்று பெற்ற மக்கள்
காணக் காத்து நிற்பவள்
ஆண்டு கொள்ள இங்கு வந்த
ஆதி சக்தி வாழ்கவே!

சொல்லடங்கி நின்ற போதில்
தூய்மைத் தோற்றம் கொண்டவள்
பல்லுயிர்க்குள் ஊறி நிற்கும்
பாச மென்னும் தேசவள்
அல்லலுற்று அழைப்பவர்க்கே
ஐயம் நீக்கு கின்றவள்.
வல்லமைக் கோர் எல்லை என்னும்
மாண்பின் அன்னை வாழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகள் நூறு கோடி
சூழ வந்த போதிலும்
நீதி உண்மை தன்னில் ஒன்றி
நின்றிருக்கும் திண்மையில்
ஜோதியாகத் தோற்றம் கொண்டு
தோள் வலிக்குள் வாழ்பவள்
காதணிந்த சக்கரத்தின்
கற்பின் அன்னை வாழ்கவே!

பற்றுக் கொள்வதற்குத் தன்னைப்
பாலமாக்கிக் கொண்டவள்
முற்றி நின்ற நற்றவத்தின்
மூலமாகி வந்தவள்
கற்ற தெல்லை இல்லை என்று
கண்ணில் காட்டி நின்றவள்
பெற்ற யாவும் பெற்று வந்த
பேசும் அன்னை வாழ்கவே! (மதி ஒளி)

❉❉❉



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கால ஸ்ரீ துர்க்கா அஷ்டகம் !

(ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அருளியது )

(ஹரிவராஸனம் மெட்டில் பாடவும்)

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீங்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

செம்மை யானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மையானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மையானவள் என்றும் முழுமையே துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

உயிரு மானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடைமையானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திரிசூலி மாயவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

கன்னி துர்க்கையே இதயக் கமலத் துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்!

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே;
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே;
கங்கண பாணியள் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி! 1

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்;
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்;
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 2

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே;
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே;
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே
எழுந்தநல் துர்க்கையளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய் ;
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய் ;
கண கண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய் ;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 4

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்த நல் குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே ;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 5

எண்ணியபடி நீ யருளிட வருவாய்—
எங்குல தேவியளே ;
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய் ;
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 6

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்றுநீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்தரு இருளில் பரிதியாய்—வந்து
பழவினை ஓட்டிடுவாய்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 7

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 8

❊ ❊ ❊

## தாயே கலைவாணி!

அம்மா தாயே கலைவாணி
நீ என் நாவைக் காப்பாயே
இம்மாநிலத்தின் இனிமையெல்லாம்
இருக்குதுன் நாவின் அசைவினிலே!

வெண்டாமரை மேல் வீற்றிருப்பாள்
வீணையைக் கையில் ஏற்றிருப்பாள்
வாணி சரஸ்வதி மாதாவே – எந்தன்
வாக்கினில் வந்து அருள்வாயே.!

அம்மா அம்மா தாயே
அகிலாண்டேஷ்வரி நீயே
அன்ன பூர்ணேஷ்வரி தாயே
ஆதி பராசக்தி நீயே.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா காளியின் புகழ்!

## காவடிச்சிந்து

*ராகம் - ஆனந்தபைரவி* *தாளம் - ஆதி*

காலமாம் வனத்திலண்டக் கோலமா மரத்தின்மீது
காளிசக்தி யென்றபெயர் கொண்டு – ரீங்
காரமிட் டுலவுமொரு வண்டு – தழல்
காலும்வழி நீலவன்ன மூலஅத்து வாக்களெனும்
கால்களா றுடையதெனக் கண்டு – மறை
காணுமுனி வோருரைத்தார் பண்டு.

மேலுமாகிக் கீழுமாகி வேறுள திசையுமாகி
விண்ணுமண்ணு மானசக்தி வெள்ளம் – இந்த
விந்தையெல்லா மாங்கதுசெய் கள்ளம் – பழ
வேதமா யதன்முனுள்ள நாதமாய் விளங்குமிந்த
வீரசக்தி வெள்ளம்விழும் பள்ளம் – ஆக
வேண்டுநித்த மென்றனேழை யுள்ளம்.

அன்புவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்பள்
ஆக்கநீக்கம் யாவுமவள் செய்கை – இதை
ஆர்ந்துணர்ந்த வர்களுக்குண் டுய்கை – அவள்
ஆதியா யநாதியா யகண்டவறி வாவளுன்றன்
அறிவுமவள் மேனியிலோர் சைகை – அவள்
ஆனந்தத்தி னெல்லையற்ற பொய்கை

இன்புவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்பள்
இஃதெலா மவள்புரியு மாயை – அவள்
ஏதுமற்ற மெய்ப்பொருளின் சாயை – எனில்
எண்ணியேஓம் சக்தியெனும் புண்ணிய முனிவர்நித்த
மெய்துவார்மெய்ஞ் ஞானமெனுந் தீயை – எரித்
தெற்றுவாரிந் நானெனும்பொய்ப் பேயை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சத்தியுந்தான்
அங்குமிங்கு மெங்குமுள வாகும் – ஒன்றே
யாகினா லுலகனைத்தும் சாகும் – அவை
யன்றியோர் பொருளுமில்லை, அன்றியொன்று மில்லையிதை
ஆய்ந்திடில்து யரமெல்லாம் போகும் – இந்த
அறிவுதான் பரமஞான மாகும்
நீதியா மரசுசெய்வார் நிதிகள்பல கோடிதுய்ப்பர்
நீண்டகாலம் வாழ்வர் தரைமீது – எந்த
நெறியுமெய்து வார் நினைத்த போது – அந்த
நித்தபுத்த சுத்தசத்த பெருங் காளி பத
நீழலடைந்தார்க் கில்லையோர் தீது – என்று
நேர்மை வேதஞ் சொல்லும் வழியீது!

– *மகாகவி பாரதியார்*

❊❊❊

# *பாஹி பாஹி!*

*ராகம் : ஹம்ஸத்வனி* *தாளம் : ஆதி*

பாஹி பாஹி பவதாரிணி காளி சொரூபிணி பவதாரிணி
ஸ்ரீ சக்ரவாஸினி பவதாரிணி தக்ஷணாமூர்த்தே பவதாரிணி
ஓங்காரரூபிணி பவதாரிணி ஹ்ரீங்கார மர்த்தனி பவதாரிணி
அங்கயற்கண்ணி பவதாரிணி ஜகதாம்ப பவானி பவதாரிணி
ஸம்ஹார ரூபிணி பவதாரிணி துர்க்கா லக்ஷ்மி பவதாரிணி
துக்கநிவாரணி பவதாரிணி அன்னபூர்ணேஸ்வரி பவதாரிணி!

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹிஷாஸுர மர்த்தினி ஸ்தோத்ரம்!

அயி கிரிநந்தினி நந்தித மேதினி
விச்வ விநோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய சிரோதி–நிவாஸினி
விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே/
பகவதி ஹே சிதிகண்ட்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//

ஸுரவர–வர்ஷிணி துர்தர தர்ஷிணி
துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர – தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே/
தனஜ – நிரோஷிணி திதிஸுதரோஷிணி
துர்மத சோஷிணி ஸிந்து ஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//

அயி ஜகதம்ப மதம்ப கதம்ப
வனப் பிரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய
ச்ருங்க நிஜாலய மத்யகதே/
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலதலாமல கோமல காந்தி
கலாகலிதாமல பாலலதே
ஸகலவிலாஸ கலாநிலயக்ரம
கேலி சலத்கல ஹம்ஸகுலே/
அலிகுல ஸம்குல குவலய மண்டல
மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//

கனகலஸத்கல ஸிந்து ஜலைரநு
ஸிஞ்சிநுதே குண ரங்கபுவம்
பஜதி ஸகிம் ந சசீ குச கும்ப
தடீபரிரம்ப ஸுகாநுபவம்/
தவசரணம் சரணம் கரவாணி
நதாமரவாணி நிவாஸி சிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//

❊❊❊

## மஹாசக்திக்கு விண்ணப்பம் !

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்;

பண்ணிய பாவம் எல்லாம்
பரிதிமுன் பனியே போல,
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!

*– மகாகவி பாரதியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்திடு மாகாளி !

ஒரு வைரத் தோடதனால்
வானத்தில் நிலவாக்கி
உன்னடிமை வார்த்தைதனை
உலகறியச் செய்தவளே!

நுனிமரத்துக் கொப்பிருந்து
அடிமரத்தை வெட்டியவர்
உன்புகழைப் பாட வைத்து
உவந்திருந்தாய் காளியம்மா!

ஆதி பராசக்தி அகிலாண்டேஸ்வரி
அற்புதரூபிணி மாகாளி

சங்கரர் பாதி நீ சாந்த மஹேஸ்வரி
சுந்தர ரூபிணி மாகாளி – உனை
சரணமடைந்தவர் பவக்கடல் கடத்திடும்
பவதாரிணி நீ மாகாளி!

ஒருவிழி அசைவினால் உலகத்தை அழித்திடும்
உக்கிர ரூபிணி மாகாளி
அரைவிழி அசைவினால் அகிலத்தை ரட்சிக்கும்
ஆனந்த ரூபிணி மாகாளி!

தனிமையை நாடிடும் தவமுனி தேடிடும்
தலைவியும் நீயே மாகாளி – உனை
தாயென நாடினேன் வாரியணைத்தென்
தனிமையைப் போக்கிடு மாகாளி!

என் அருகினில் வந்திடு மாகாளி
உன் அன்பினைத் தந்திடு மாகாளி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளியே வாழி!

அன்னையின் அபயத் திருவடியதனில்
என்னுயிர் வைத்தே எய்தினேன் சரணம்
என்ன பயமினி எமனிடம் எனக்கு
சென்னியின் முடியில் தேவி காளியின்
உன்னத மந்திரம் தன்னை முடிந்தேன்!

உலகச் சந்தையில் உடலினை விற்று
நலமிகு துர்க்கையின் நாமம் வேண்டினேன்

கல்பதருவாம் காளியின் பெயரை
உள் நெஞ்சதனுள் உயிர்க்க நாட்டினேன்

எமன் வரும் தருணம் இதயம் திறந்து
அமைதியோடதனை அவனிடம் காட்டுவேன்

தளர்விலா ஆறு பகைவர்கள் தம்மை நான்
வெளியிலே தள்ளி விரட்டி அடித்தேன்

ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ துர்க்கா எனப்
பயணம் வாழ்க்கைப் பரவையில் தொடங்க

ஏற்பாடனைத்தும் இங்கு யான் செய்து
காத்திருக்கிறேன் காளியே வாழி!

❊❊❊

சங்கரிபரமேஸ்வரி சசிசேகரி அம்பா
சர்வேஸ்வரி ஜெகதீஸ்வரி மஹேஸ்வரி அம்பா
சுந்தரி குலமஞ்சரி சிவசங்கரி அம்பா
காதம்பரி ஸ்வேதம்பரி ஹரிஸோதரி அம்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம்!

கற்பூரநாயகியே! கனகவல்லி
காளிமகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்டசிவ காமியம்மா
பூவிருந்த வல்லிதெய்வ யானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
பொற்கோவில் தானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே! (கற்பூர)

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி! (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறுஎந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயேஎந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில்மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ – அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டுன் முகம்திருப்பு
சிரித்தபடி என்னைத்தினம் வழிஅனுப்பு! (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னையே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளை நீதீருமம்மா! (கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெலாம் நீடுழி வாழவேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளைஎன்னைத் தள்ளலாமா! (கற்பூர)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ
கன்றுக்குப் பசுவன்றி சொந்தமுண்டோ
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீஎந்தன் அன்னையன்றோ
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ! (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்கவேண்டும்
வஞ்சத்தை என்னெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்
பரிவுக்கே நான்என்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீஎன்றும் வாழவேண்டும்! (கற்பூர)

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி! உன்னெழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவில்லை! (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயேஉன்னைப்
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை! (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்த சக்தி ஓம் சிவம்!

ராகம் : மாண்டு          தாளம் : திஸ்ர ஏகம்

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம் (சு)

வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சு)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ர–தந்த்ர வச்யசக்தி ஓம்சிவம் (சு)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சு)

துஷ்டசத்ரு நாச சக்தி துர்க்கா சக்தி ஓம்சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சு)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம் (சு)

–ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

❊ ❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி ஓம்!

ராகம் : மோஹனம் தாளம் : ஆதி

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,

ஸுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம்)

நந்திதேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்! (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்!

– சாது ஸ்ரீ முருகதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கார ஸ்ரீதரியே!

ராகம் : ஹம்ஸத்வனி                    தாளம் : ஆதி

ஓங்கார ஸ்ரீ தரியே
என்னை நினைந்தருள்வாய்
பூர்வவினைத் தளையால் வாடித் தளர்ந்தேனம்மா
ஆரமுதத்தாயே என்னை வாரியணைத்திடுவாய்!

உற்றார் உறவினர்கள்
என் உற்றவர் அல்லர் தாயே
உன்னை அல்லாது மற்றார்
யாரும் துணையில்லையே!

ஞானமலர் மலர்ந்தாய்
ஞான மதுவை உண்டு
ஐம்பிழை தீர்த்திடுவேன்
ஆனந்தத் தீங்கனியே!

ஞானப் பிழம்பொளியே – நின்
பேரன்பில் ஏற்றிச் செல்வாய்
ஊனுடலை நம்பி வாழ்வதும் வாழ்வாமோ ?
தெய்வத்திரு மணியே மாதுரி நீயே கதி – ஓங்கார

**– ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா**

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பக வல்லி!

ராகம் : ராகமாலிகை தாளம் : ஆதி

## பல்லவி

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வா யம்மா ! (கற்பக)

## அனுபல்லவி

பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்கார கோயில் கொண்ட (கற்பக)

## சரணம்

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌன மம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளு மம்மா ! (கற்பக)

எல்லோருக்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமாஉனை நம்பினே னம்மா! (கற்பக)

நாகேச்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீச்வரி மாயே வாராயிது தருணம்
பாகேஸ்ரீ தாயே பார்வதியே – இந்த
லோகேச்வரிநீயே உலகினில் துணையம்மா! (கற்பக)

அஞ்சன மையிடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம்
தஞ்சம் என அடைந்தேன் தாயே உன் சேய் நான்
ரஞ்ஜனியே ரக்ஷிப்பாய் கெஞ்சுகின்றேன் அம்மா! (கற்பக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜய ஜய ஜய சக்தி !

ஜய ஜய ஜய சக்தி – ஓம் ஸ்ரீ ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய வென தினம் பாடிப்பணிந்தோம்
ஜகம் எங்கும் அமைதியைத் தா – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய – அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி பலமருள்வாய் – அம்மம்மா
கரம் குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் – அம்மம்மா
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலம் நான் – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரதி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா – ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி !

துன்பம் இலாத நிலையே சக்தி
தூக்கம் இலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி,
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி;
இன்பம் முதிர்ந்த முதிர்வே சக்தி,
எண்ணத் திருக்கும் எரியே சக்தி;
முன்பு நிற்கின்ற தொழிலே சக்தி
முத்தி நிலையின் முடிவே சக்தி!

சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி
சொல்லில் விளங்கும் சுடரே சக்தி;
தீம்பழம் தன்னில் சுவையே சக்தி
தெய்வத்தை எண்ணும் நினைவே சக்தி;
பாம்பை அடிக்கும் படையே சக்தி
பாட்டினில் வந்த களியே சக்தி;
சாம்பரைப் பூசி மலைமிசை வாழும்
சங்கரன் அன்புத் தழலே சக்தி!

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலம் காக்கும் வலியே சக்தி;
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி,
சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி.
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணை அளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத்து ஒளிரும் விளக்கே சக்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புவனேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகள் துதி!

*ராகம் : சக்கரவாகம்* *தாளம் : திஸ்ரஏகம்*

நித்தமுனை வேண்டி மனம்
நினைப்ப தெல்லாம் நீயாய்ப்
பித்தனைப் போல் வாழ்வதிலே
பெருமை யுண்டோ? திருவே !
சித்தவுறுதி கொண் டிருந்தார்
செய்கை யெல்லாம் வெற்றிகொண்டே
உத்தமநிலை சேர்வ ரென்றே
உயர்ந்த வேதமுரைப்ப தெல்லாம்
சுத்த வெறும் பொய்யோடீ?
சுடர் மணியே ! திருவே !
மெத்த மையல் கொண்டுவிட்டேன்
மேவிடு வாய் திருவே !

உனையன்றி இன்ப முண்டோ
உலகமிசை வேறே?
பொன்னை வடிவென் றுடையாய்
புத்தமுதே, திருவே !
மின்னொளி தருநன் மணிகள்
மேடை யுயர்ந்த மாளிகைகள்
வன்ன முடைய தாமரைப்பூ
மணிக்குள முள்ள சோலைகளும்
அன்னம் நறுநெய் பாலும்
அதிசயமாகத் தருவாய்
நின்னருளை வாழ்த்தி என்றும்
நிலைத்திருப்பேன், திருவே !

**— மகாகவி பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மி பிரார்த்தனை !

## திரு வேட்கை

நாட ராகம் சதுஸ்ர ஏகதாளம்

மலரின் மேவு திருவே – உன்மேல்
மையல்பொங்கி நின்றேன்
நிலவு செய்யு முகமும் – காண்பார்
நினைவழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும் – தெய்வக்
களிதுலங்கு நகையம்
இலகு செல்வ வடிவும் – கண்டுன்
இன்பம்வேண்டு கின்றேன் !

கமலமேவு திருவே – நின்மேல்
காதலாகி நின்றேன்
குமரி நின்னை யிங்கே – பெற்றார்
கோடியின்ப முற்றார்
அமரர் போல வாழ்வேன் – என்மேல்
அன்புகொள்வை யாயின்
இமய வெற்பின் மோத - நின்மேல்
இசைகள்பாடி வாழ்வேன் !

வாணி தன்னை யென்றும் – நினது
வரிசைபாட வைப்பேன்
நாணி யேக லாமோ? – என்னை
நன்கறிந்தி லாயோ?
பேணி வைய மெல்லாம் – நன்மை
பெருகவைக்கும் விரதம்
பூணு மைந்த ரெல்லாம் – கண்ணன்
பொறிகளாவ ரன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னு நல்ல மணியும் – சுடர்செய்
பூண்களேந்தி வந்தாய்
மின்னு நின்றன் வடிவிற் – பணிகள்
மேவிநிற்கு மழகை
என்னுரைப்ப னேடீ – திருவே,
என்னுயிர்க்கொ ரமுதே,
நின்னை மார்பு சேரத் – தழுவி
நிகரிலாது வாழ்வேன்!

செல்வ மெட்டு மெய்தி – நின்னாற்
செம்மையேறி வாழ்வேன்.
இல்லை யென்ற கொடுமை – உலகில்
இல்லையாக வைப்பேன்
முல்லை போன்ற முறுவல் – காட்டி
மோகவாதை நீக்கி
எல்லையற்ற சுவையே – எனை நீ
என்றும் வாழ வைப்பாய!

– *மகாகவி பாரதியார்*

❊❊❊

# ஜெய அம்பிகே!

ஜெய அம்பிகே ஜகதம்பிகே
பாதாரவிந்த மூகாமபிகே
தயாகரீ பரமேஸ்வரீ க்ருபாகரி மகேஸ்வரி
க்ஷமாகரீ புவனேஸ்வரீ ரக்ஷாகரீ மாகேஸ்வரீ
பாதாரவிந்த நமோஸ்துதே
ப்ரணமாம்யஹம் தேவீ சண்டிகே!
ஜகத்தாரிணீ உத்தாரிணீ ஜகத்காரிணீ விஷ்வதாரிணீ
பய–சோக–துக்க நிவாரிணீ சுக–சாந்தி–அம்ர்த வர்ஷிணீ
சுத்த–பக்தி–முக்தி ப்ரதாயினீ
பாதாரவிந்த நமோஸ்துதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மி தேவி!

## சரண் புகுதல்

மாதவன் சக்தியினைச் – செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
போதுமிவ் வறுமையெல்லாம் – எந்தப்
போதினுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும் – உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்கவில்லை – அன்னை
மாமக ளடியிணை சரண்புகுவோம்!

கீழ்களி னவமதிப்பும் – தொழில்
கெட்டவ ரிணக்கமுங் கிணற்றினுள்ளே
மூழ்கிய விளக்கினைப்போல் – செய்யு
முயற்சியெல் லாங்கெட்டு முடிவதுவும்
ஏழ்கட லோடியுமோர் – பயன்
எய்திட வழியின்றி யிருப்பதுவும்
வீழ்கவிக்கொடு நோய்தான் – வைய
மீதினில் வறுமையொர் கொடுமையன்றோ?

பாற்கட லிடைப்பிறந்தாள் – அது
பயந்தநல் லமுதத்தின் பான்மைகொண்டாள்
ஏற்குமொர் தாமரைப்பூ – அதில்
இணைமலர்த் திருவடி யிசைந்திருப்பாள்
நாற்கரந் தானுடையாள் – அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்
வேற்கரு விழியுடையாள் – செய்ய
மேனியள் பசுமையை விரும்பிடுவாள்.!

நாரணன் மார்பினிலே – அன்பு
நலமுற நித்தமு மிணைந்திருப்பாள்
தோரணப் பந்தரிலும் – பசுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவிலுஞ் சுடர்மணி மாடத்திலும்
வீரர்தந் தோளினிலும் – உடல்
வெயர்த்திட வுழைப்பவர் தொழில்களிலும்
பாரதி சிரத்தினிலும் – ஒளி
பரவிட வீற்றிருந் தருள்புரிவாள்!

பொன்னிலு மணிகளிலும் – நறும்
பூவிலுஞ் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும் – செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் – மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடுந் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி – அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம்!

மண்ணினுட் கனிகளிலும் – மலை
வாய்ப்பிலும் வார்கட லாழத்திலும்
புண்ணிய வேள்வியிலும் – உயர்
புகழிலு மதியிலும் புதுமையிலும்
பண்ணுநற் பாவையிலும் – நல்ல
பாட்டிலுங் கூத்திலும் படத்தினிலும்
நண்ணிய தேவிதனை – எங்கள்
நாவிலு மனத்திலு நாட்டிடுவோம்!

வெற்றிகொள் படையினிலும் – பல
விநயங்க ளறிந்தவர் கடையினிலும்
நற்றவ நடையினிலும் – நல்ல
நாவலர் தேமொழித் தொடையினிலும்
உற்றசெந் திருத்தாயை – நித்தம்
உவகையிற் போற்றியிங் குயர்ந்திடுவோம்
கற்றபல் கலைகளெல்லாம் – அவள்
கருணைநல் லொளிபெறக் கலிதவிர்ப்போம்.!

*– மகாகவி பாரதியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலை வளர் காதலி !

இராகம் - மோஹனம் தாளம் - அடதாளம்

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகீ த்ரியம்பகீ எழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சஹஸ்ரதள
புட்பமிசை வீற்றி ருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்க வசமோ
வாரணி சடைக்கடவு ளாரணி யெனப் புகழ
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியு மிருகொங்கை மாதர் மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெ ணுமையே.

– ஸ்ரீ தாயுமான சுவாமிகள்

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரஸ்வதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைவாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி தேவியின் புகழ்!

ராகம்- ஆனந்தபைரவி　　　　　　　　தாளம் - சாப்பு

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
　　வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
　　கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
　　ஓதும் வேதத்தின் உள் நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
　　கருணை வாசகத் துட்பொருளாவாள்.　　(வெள்ளைத்) 1

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
　　மக்கள் பேசு மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
　　கிளியி னாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
　　குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
　　இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.　　(வெள்ளைத்) 2

வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
　　வாழு மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்,
　　வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்,
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
　　வீர மன்னர்பின் வேதியர், யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
　　தரணி மீதறி வாகிய தெய்வம்.　　(வெள்ளைத்) 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் யாவு முணர்த்திடுந் தெய்வம்,
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்,
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்,
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்,
கைவ ருந்தி யுழைப்பவர் தெய்வம்,
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம். (வெள்ளைத்) 4

செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர் !
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர் !
வந்த னம்மிவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று, கண்டீர்
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி யதன்மேல்
சந்த னத்தை மலரை யிடுவோர்
சாத்தி ரம்மிவள் பூசனை யன்றாம். (வெள்ளைத்) 5

வீடு தோறுங் கலையின் விளக்கம்,
வீதி தோறு மிரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலு முள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி,
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கு மமுதமெ னன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்!. (வெள்ளைத்) 6

ஊணர் தேசம், யவனர்தந் தேசம்,
உதய ஞாயிற் றொளிபெறு நாடு,
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்,
செல்வப் பார சிகப்பழந் தேசம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண லத்த துருக்க, மிசிரம்,
சூழ்க டற்கப் புறத்தினி லின்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவி னொளிமிகுத் தோங்க. (வெள்ளைத்) 7

ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்,
ஊன மின்று பெரிதிழைக் கின்றீர்,
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்,
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா;
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்! (வெள்ளைத்) 8

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்,
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்,
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்,
ஆல யம்பதி னாயிர நாட்டல,
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல். (வெள்ளைத்) 9

நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர் !
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர் !
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர் !
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர் !
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர் !
எதுவு நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுதும் வாரீர்! (வெள்ளைத்) 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயகலைகள்!

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்.
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்!

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடெம்மைச்
சரியாசனம் வைத்த தாய்!

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைபோல் கையும் – துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி.?

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபர சுவாமிகள் அருளிய

# சகலகலா வல்லி மாலை!

## உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

## நாற்கவி பாட நல்லருள் தருவாய்

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *கலைமகள் அருளிற் குளிக்க விரும்புதல்*

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

### *கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்*

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேககுஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

### *நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்*

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் நாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மனமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்ணும் பரதமும் நல்கிட வேண்டுதல்

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

### பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே.

### சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்*

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

### *மன்னர் தன்னையும் பணியச் செய்வாய்*

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாய்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

❈❈❈



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கடவூர்த் துதிப் பதிகம்!

துதியேன் எனினும், தொழுகேன் எனினும், தொழும்பர் தமை
மதியேன் எனினும், வணங்கேன் எனினும், வலிய வந்து
கதியே தரும் வழி காட்டிடுவாய் நின் கருணையினால்
விதியே புகழ் கடவூரின் கள்ள விநாயகனே

*நூல்*
*(ஆசிரிய விருத்தம்)*

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்

சலியாத மனமும் அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உத விப்பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்—;

அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச்சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண் டலம்நுதற்
கத்தூரி யிட்ட பொட்டும்

கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியும் குந்திநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்

வாரணிந் திறுமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே;

ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 2

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்களன்றோ?

செகமுழுதும் ஒற்றைத் தனிக்குடை கவித்துமேற்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மநுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரியுல காண்டு புன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகர்முகத்(து) ஐராவதப் பாக ராகிநிறை
புத்தேளிர் வந்து போற்றிப்
போகதே வேந்திரன் எனப்புகழ் விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்;

அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 3

மறிகடல்கள் ஏழையுந் திகிரி இரு நான்கையும்
மாதிரக் கரியெட்டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையுமோர்

பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேளிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும்அரையிற்
புலியாடை உடையா னையும்

முறைமுறைக ளாயீன்ற முதியவர்களாய்ப்–பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகிலுள்ளவர்கள் வாலையென் (று) அறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்–;

அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகால்
வருந்தா மலேய ணைத்துக்

கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொடுத்து

நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்—
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலீ அகிலங் களுக்(கு) அன்னை என்றோதும்
நீலியென் (று) ஓது வாரோ?

ஆடாய நான்மறையின் வேள்விபால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 5

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற் பவித் திடுகருப்
பையுறு சீவ னுக்கும்

மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லா மலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்குந் தொழிற் பெருமை உண்டா யிருந்துமிகு
நவநிதி உனக்கி ருந்தும்
நானொருவன் வறுமையிற் சிறியனானால் அந்த
நகைப்புனக் கே அல்லவோ?

அல்கலந் தும்பர்நாடளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 6

நீடுல கங்களுக்(கு) ஆதார மாய்நின்று
நித்தமாய்– முத்தி வடிவாய்–
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனை வியாய் இருந்தும்

வீடுவீ டுகடோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்று இலச்சை யும்போய்–
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்

ஒடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்(று)
உன்மத்த னாகி அம்மா
உன் கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய்–;

ஆடுகொடி மாடமிசை மாதர்விளையாடி வரும்
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தி னிற்போல்—
நடுவினி லிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு

ஈனந்தனைத் தள்ளி எனது நானெனுமானம்
இல்லாமலேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்துநெஞ்(சு)
இருளற விளக்கேற் றியே

ஆனந்த மானவிழி அன்னமே! உன்னை என்
அகத்தா மரைப்போ திலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாத தோர்

ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்;
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே! 8

சலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினாலெ னக்குத்
தாயல்லவோ? யான் உ ன்மைந்தனன்றோ? எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்

முலைசுரந் தொழுகுபா லூட்டி என் முகத்தை உன்
முன்தானை யால்து டைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண்டிள நிலா
முறுவல் இன்புற்றரு கில்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலவி விளையாடல் கொண்டருண்மழை பொழிந் (து) அங்கை
 கொட்டி வாவென்(று) அழைத்துக்
குஞ் சரமுகன்கந்த னுக் (கு) இளையன் என்றெனைக்
 கூறினால் ஈனம் உண்டோ?

அலைகடலி லேதோன்று மாறாத அமுதமே
 ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
 அருள்வாமி! அபிராமியே! 9

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
 கணப்போதும் அர்ச்சிக் கிலேன்
கண்போதினாலுன் முகப்போது தன்னையான்
 கண்டு தரிசனை புரிகிலேன்;

முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
 முன்னி உன் ஆலயத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன் ;
 மோசமே போய்–உழன்றேன்;

மைப்போத கத்திற்கு நிகரெனப் போதெரு
 மைக்கடா மீதேறி யே
மாகோர காலன் வரும்போது தமியேன்
 மனங்கலங் கித்தி யங்கும்

அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
 ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
 அருள்வாமி! அபிராமியே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகையுந் துரத்தவெம்பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த
மிடியுந் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந்து ரத்தப்

பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்தப்
பசியென் பதுந்துரத்தப்
பாவந் துரத்த பதிமோகந் துரத்தப்
பலகா ரியமுந் துரத்த

நகையுந் துரத்த ஊழ் வினையுந் துரத்த
நாளுந் துரத்த வெகுவாய்–
நாவரண் டோடி கால்தளர்ந்திடும் என்னை
நமனுந் துரத்து வானோ?

அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழவே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 11

❊ ❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்!

தொடுக்குங் கடவுட் பழம் பாடற் தொடையின் பயனே
நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை யகழ்ந்

தெடுக்குந் தொழும்பர் உளக் கோயிற் கேற்றும் விளக்கே
வளர்சிமய இமயப் பொருப்பில் விளையாடு
மிள மென் பிடியே யெறி தரங்க

முடுக்கும் புவனங் கடந்து நின்றவொருவன் திருவுள்ளத்தில்
அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே
மதுகரம் வாய்

மடுக்குங் குழற்காடே ந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன்பெற்ற பெருு வாழ்வே வருக வருகவே

பெருந் தேனிறைக்கு நறைகூந்தற் பிடியே வருக
முழுஞானப்பெருக்கே வருக பிறைமௌலிப்பெம்மான்
முக்கட்சுடர்க் கிடு நல்

விருந்தே வருக அருள் ட்பழுத்த கொம்பே வருக திருக்கடைக்
கண் கொழித்த கருணைப்பெரு வெள்ளங் குடைவார்
பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே
முன்பும்பரரசு செய் பெரும் பாவமுங் கோப

மூரிமாத் தொடர் சாபமும்
மும்மை தமிழ்ச்செழியன் வெப்பொடு கொடுங்கூனும்
மோசித்த வித்தலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்பெருந் தன்மையை யுணர்ந்திலைகொல்? சிவ
ராசதானியாய்ச் சீவன் முத்தித்
தலமுமாய்த் துவாதசாந்தத் தலமுமான இத்
தலமித்த லத்திடையேன்

மன் பெருங் குரவந் பிழைத்த பாவமும் மற்ற
மாமடிகளிடு சாபமும்
வளரிளம் பருவத்து நரை திரையும் முதிர்கூனு
மாற்றிடப் பெருதி கண்டாய்

அன்பரென் புருகக் கசிந்திடு பசுந் தேனொடம்புலி
ஆடவாவே
ஆணிப் பொன் வில்லி புணர் மாணிக்கவல்லி
யுடனம் புலி யாடவாவே.

நிறை பொங்கிடுஞ் செங்கை வெள்வளை கலிப்பநகை
நிலவு விரி பவளம் வெளிற
நீலக் கருங்குவளை செங்குவளை பூப்பவறல்
நெறி குழற் கற்றை சரியத்

திரைபொங்கு தண்ணந் துறைக்குடைந் தாடுவ
செழுந்த ரங்கக் கங்கை நுண்
சிறு திவலை யாப்பொங்கு மானந்த மாக்கடல்
திளைத் தாடுகின்ற தேய்ப்பக்

கரை பொங்குறிதி மரைக் கையாற் றடம்பணைக்
கழனியிற் கன்னியர் முலைக்
களபக் குழம்பைக் கரைத்து விட்டள்ளற்
கருஞ் சேறு செஞ் சேறாய்

விரை பொங்கிடத்துங்க வேகவதி பொங்குபுது
வெள்ள நீராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்த
கொடி வெள்ள நீராடியருளே!

*– குமரகுருபரர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உந்தன் இச்சையம்மா!

எல்லாம் உந்தன் இச்சையம்மா
இச்சாரூபி தாயே நீயே
உந்தன் கார்யம் நீயே செய்தால்
தானே செய்தான் என்பான் மூடன்!
சேற்றில் யானை வீழச்செய்வாய்
குன்றை முடவன் தாண்டச் செய்வாய்
பிரம்ம பதத்தை அருளும் நீயே
மாயையாலும் மயக்குவாயே!
யந்திரம் நான் இயக்குகின்றாய்
எந்தன் உடலோ உந்தன் இல்லம்
ரதமும் நான் நீ ஓட்டுகின்றாய்
ஓடுகின்றேன் ஓட்டியபடி!

❊❊❊

# சரணம் அம்மா!

காளி மஹேஸ்வரி பார்வதி சங்கரி
சரணம் சரணம் சரணம் அம்மா!
துர்கதி நாசினி துர்க்கா ஜெய் ஜெய்
கால விநாசினி காளி ஜெய் ஜெய்
உமா ரமா ப்ரஹ்மாணி ஜெய் ஜெய்
ராதா சீதா ருக்மிணி ஜெய் ஜெய் !
வாணி வீணா பாணீ ஜெய் ஜெய்
வாகீஸ்வரி ஜெகதீஸ்வரி ஜெய் ஜெய்
வித்யா ரூபிணி விஷ்வ விமோஹினி
வரதே தேவி ஜெகதம்பிகே!

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி பராசக்தி !

ஜகஜ்ஜனனி ஜகன் மாதா ஆதிபராசக்தி பாலயமாம்
திருமயிலை கற்பகாம்பா ஆதிபராசக்தி பாலயமாம்
திருவேற்காட்டில் கருமாரி ஆதிபாரசக்தி பாலயமாம்
திருக்கடவூர் அபிராமி ஆதிபராசக்தி பாலயமாம்
தென்மதுரை மீனாட்சி ஆதிபராசக்தி பாலயமாம்
திருக்காஞ்சி காமாட்சி ஆதிபராசக்தி பாலயமாம்
திருக்காசி விசாலாட்சி ஆதிபராசக்தி பாலயமாம்
திரு நெல்லை காந்திமதி ஆதிபராசக்தி பாலயமாம்
ஜெயராம்பாடி சாரதாம்பா ஆதிபராசக்தி பாலயமாம்

❊ ❊ ❊

## காஞ்சி காமாட்சி !

காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி காசி விசாலாட்சி
கருணாம்பிகையே தருணம் இதுவே தயைபுரிவாய் அம்மா

உன்னருள் என்றும் நிலைபெற வேண்டும் நீ வருவாய் அம்மா
என் வாழ்வென்றும் உனைப்பெற வேண்டும் அருள் புரிவாய் அம்மா
ஏனென்று கேட்டு என்பசி தீர்ப்பாய் என்னன்னை நீ அம்மா
என்முகம் மலர நின்முகம் மலராய் மலர்ந்திடுவாய் அம்மா

பயிர்களிலுள்ள பசுமையைக் கண்டேன் பரமேஸ்வரி உனையே
உயிர்களிலுள்ள உன்னருள் கண்டேன் உலகமகா சக்தி நீயே
சரணமடைந்தேன் சங்கரி தாயே சக்தி தேவி நீயே
அரண் எனக் காப்பாய் அருகினில் வருவாய்
அகிலாண்டேஸ்வரி நீயே!

❊ ❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹே ஆனந்தமயி!

ஹே ஆனந்தமயி நீ என்னை நிரானந்தனாக்கிடாதே
தாயே நின் தாளினையே பணிவதன்றி வேறறியேன்
வா எந்தன் உளந்தனிலே வந்தமர்ந்து அருள்புரிவாய்

காலன் கை பாசமெனைக் கணமேனும் அணுகாமல்
சூலத்தால் காத்திடுவாய் துயர் தீர்ப்பாய் என் தாயே

சம்சாரப் பெருங்கடலில் சந்ததமும் ஆழ்கின்றேன்
உய்ந்திடலாம் என எண்ணி உன் நாமம் நான் புகன்றேன்

தாயே நானென் செய்வேன் இப்போதும் தவிக்கின்றேன்
சேய் என்னைக் கைவிடுதல் தாய் உனக்கு அழகாமோ?

நித்தம் நின் திருநாமம் நான் புகன்ற போதினிலும்
பக்தனை நீ கைவிட்டாய் பவக்கடலில் ஆழ்ந்தொழிந்தேன்

நான் சொல்வேன் உனக்கொன்று நன்றாகக் கேட்டிடுவாய்
நானிறந்தால் உன் நாமம் புவிதனிலே யார் சொல்வார்?

❊❊❊

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சொடு சொல்வது !

இன்னும் ஒரு முறைசொல்வேன், பேதை நெஞ்சே!
எதற்கும் இனி உளையாதே, ஏக்கம் தீர்வாய்
முன்னர் நமது இச்சையினால் பிறந்தோம் இல்லை;
முதல்இறுதி இடைநமது வசத்தில் இல்லை;
மன்னும்ஒரு தெய்வத்தின் சக்தியாலே,
வையகத்தில் பொருள் எல்லாம் சலித்தல் கண்டாய்!
பின்னை ஒரு கவலையும்இங் இல்லை நாளும்
பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்!

நினையாத விளைவெல்லாம் விளைந்து கூடி,
நினைத்தபயன் காண்பதவள் செய்கை அன்றோ?
மனமார உண்மையினைப் புரட்டலாமோ?
மஹாசக்தி செய்நன்றி மறக்கலாமோ?
எனை ஆளும் மாதேவி, வீரர்தேவி,
இமையவரும் தொழும்தேவி, எல்லைத் தேவி,
மனை வாழ்வு பொருள் எல்லாம் வகுக்கும் தேவி,
மலரடியே துணைஎன்று வாழ்த்தாய் நெஞ்சே!

சக்திஎன்று புகழ்ந்திடுவோம், முருகன் என்போம்;
சங்கரன்என் றுரைத்திடுவோம், கண்ணன் என்போம்;
நித்தியம் இங்கு அவள் சரணே நிலைஎன் றெண்ணி
நினக்குள்ள குறைகள் எலாம் தீர்க்கச் சொல்லி
பத்தியினால் பெருமை எலாம் கொடுக்கச் சொல்லிப்
பசிபிணிகள் இல்லாமல் காக்கச் சொல்லி,
உத்தமநல் நெறிகளிலே சேர்க்கச் சொல்லி,
உலகளந்த நாயகிதாள் உரைப்பாய் நெஞ்சே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்கள் கேட்டால்நீ கொடுக்க வேண்டும்,
சிறுமைகள்என் னிடமிருந்தால் விடுக்க வேண்டும்,
கல்வியிலே மதியினைநீ தொடுக்க வேண்டும்,
கருணையினால் ஐயங்கள் கெடுக்க வேண்டும்,
தொல்லைதரும் அகப்பேயைத் தொலைக்க வேண்டும்,
துணைஎன்று சேர்ப்பித்துக் காக்க வேண்டும்,
'நமோநம ஓம் சக்தி' என நவிலாய் நெஞ்சே!

பாட்டினிலே சொல்லுவதும் அவள் சொல் ஆகும்;
பயன்அன்றி உரைப்பாளோ? பாராய், நெஞ்சே;
கேட்டது நீ பெற்றிடுவாய், ஐயம் இல்லை,
கேடில்லை, தெய்வம் உண்டு வெற்றி உண்டு,
மீட்டும் உனக் குரைத்திடுவேன, ஆதி சக்தி,
வேதத்தின் முடியினிலே விளங்கும் சக்தி
நாட்டினிலே சனகனைப் போல் நமையும் செய்தான்
'நமோநம ஓம் சக்தி' என நவிலாய் நெஞ்சே!

– *மகாகவி பாரதியார்*

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு துணை!

ஓம்சக்தி ஓம் சக்தி ஓம் – பராசக்தி
ஓம்சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி – ஓம் சக்தி
ஓம்சக்தி ஓம் சக்தி ஓம்,

கணபதி ராயன் – அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமுயர்ந் திடவே – விடுதலை
கூடி மகிழ்ந்திடவே. (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

சொல்லுக் கடங்காவே – பராசக்தி
சூரத் தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் – பராசக்தி
வாழியென் றேதுதிப்போம். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

வெற்றி வடிவேலன் – அவனுடை
வீரத்தி னைப்புகழ்வோம்
சுற்றிநில் லாதேபோ ! – பகையே !
துள்ளி வருகுதுவேல். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

தாமரைப் பூவினிலே – சுருதியைத்
தனியி ருந்துரைப்பாள்
பூமணித் தாளினையே – கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம். (ஓம்சக்தி ஓம் சக்தி ஓம்)

பாம்புத் தலைமேலே – நடஞ்செயும்
பாதத்தி னைப்புகழ்வோம்
மாம்பழ வாயினிலே – குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

செல்வத் திருமகளைத் – திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல் லாந்தருவாள் – நமதொளி
திக்கனைத் தும்பரவும். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைய முழுதும்!

வைய முழுதும் படைத்தளிக் கின்ற
மஹாசக்தி தன்புகழ் வாழ்த்து கின்றோம்;
செய்யும் வினைக ளனைத்திலுமே வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க வென்றே.

பூதங்க ளைந்தி லிருந்தெங்குங் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்று கின்றோம்;
வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டு மென்றே.

வேகம், கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவு கின்றோம்
ஏக நிலையி லிருக்கும் அமிர்தத்தை
யாங்க ளறிந்திட வேண்டு மென்றே.

உயிரெனத் தோன்றி யுணவுகொண் டேவளர்ந்
தோங்கிடும் சக்தியை ஒது கின்றோம்;
பயிரினைக் காக்கும் மழையென எங்களைப்
பாலித்து நித்தம் வளர்க்க வென்றே.

சித்தத்திலே நின்று சேர்வ துணரும்
சிவசக்தி தன்புகழ் செப்பு கின்றோம்;
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டு மென்றே.

மாறுத லின்றிப் பராசக்தி தன்புகழ்
வண்ணமுற நித்தம் பாடு கின்றோம்.
நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டு மென்றே.

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
ஓம்சக்தி யென்றுரை செய்திடு வோம்
ஓம்சக்தி யென்பவர் உண்மைகண் டார்சுடர்
ஒண்மைகொண் டார், உயிர் வண்மை கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசக்தி புகழ்!

ராகம் - தன்யாஸி, தாளம் - சதுஸ்ர ஏகம்

சக்திசக்தி சக்தியென்று சொல்லு – கெட்ட
சஞ்சலங்கள் யாவினையுங் கொல்லு –
சக்திசக்தி சக்தியென்று சொல்லி – அவள்
சந்நிதியி லேதொழுது நில்லு.

சக்திமிசை பாடல்பல பாடு – ஓம்
சக்திசக்தி யென்றுதாளம் போடு
சக்திதருஞ் செய்கைநிலந் தனிலே – சிவ
சக்திவெற்றி கொண்டுகளித் தாடு.

சக்திதனை யேசரணங் கொள்ளு – என்றும்
சாவினுக்கொ ரச்சமில்லை தள்ளு –
சக்திபுக ழாமமுதை யள்ளு – மதி
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு.

சக்திசெயும் புதுமைகள் பேசு – நல்ல
சக்தியற்ற பேடிகளை யேசு –
சக்திதிருக் கோயிலுள்ள மாக்கி – அவள்
தந்திடுநற் குங்குமத்தைப் பூசு.

சக்தியினைச் சேர்ந்ததிந்தச் செய்கை – இதைச்
சார்ந்துநிற்ப தேநமக்கொ ருய்கை –
சக்தியெனு மின்பமுள்ள பொய்கை – அதில்
தண்ணமுத மாரிநித்தம் பெய்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திசக்தி சக்தியென்று நாட்டு – சிவ
சக்தியருள் பூமிதனில் காட்டு
சக்திபெற்ற நல்லநிலை நிற்பார் – புவிச்
சாதிகளெல் லாமதனைக் கேட்டு.

சக்திசக்தி சக்தியென்று முழங்கு – அவள்
தந்திரமெல் லாமுலகில் வழங்கு
சக்தியருள் கூடிவிடு மாயின் – உயிர்
சந்ததமும் வாழுநல்ல கிழங்கு.

சக்திசெயுந் தொழில்களை யெண்ணு – நித்தஞ்
சக்தியுள்ள தொழில்பல பண்ணு
சக்திதனை யேயிழந்து விட்டால் – இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு.

சக்தியரு ளாலுலகி லேறு – ஒரு
சங்கடம்வந் தாலிரண்டு கூறு
சக்திசில சோதனைகள் செய்தால் – அவள்
தண்ணருளென் றேமனது தேறு.

சக்திதுணை யென்றுநம்பி வாழ்த்து – சிவ
சக்திதனை யேயகத்தி லாழ்த்து
சக்தியுஞ் சிறப்புமிகப் பெறுவாய் – சிவ
சக்தியருள் வாழ்கவென்று வாழ்த்து.

*–மகாகவி பாரதியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி !

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம், இவள்
பார்வைக்கு நேர்பெருந்தீ
வஞ்சனை இன்றிப் பகைஇன்றிச் சூதின்றி
வையக மாந்தர் எல்லாம்
தஞ்சம்என் றேயுரைப்பீர்: "சக்தி ஓம், சக்தி,
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்." 1

நல்லதும் தீயதும் செய்திடும் சக்தி,
நலத்தை நமக் கிழைப்பாள்;
"அல்லது நீங்கும்" என் றேஉல கேழும்
அறைந்திடு வாய் முரசே!
சொல்லத் தகுந்த பொருள் அன்று காண்! இங்குச்
சொல்லும் அவர்தமையே,
அல்லல் கெடுத்து அம ரர்க்கிணை ஆக்கிடும்
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்.! 2

நம்புவ தேவழி என்ற மறைதன்னை
நாம்இன்று நம்பி விட்டோம்
கும்பிட்டுஎந் நேரமும், 'சக்தி' என் றால் உனைக்
கும்பிடு வேன்மன மே!
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சம் இல் லாதபடி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னைப் பொழிந்திடு, மின்னை வளர்த்திடு
போற்றி உனக் கிசைத்தோம்
அன்னை பராசக்தி என்றுரைத் தோம், தளை
அத்தனையும் களைந்தோம்;
சொன்ன படிக்கு நடத்திடுவாய், மன
மேதொழில் வேறில்லை, காண்;
இன்னும்அ தே உரைப்போம், சக்தி ஓம் சக்தி
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்! 4

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொருள்
ஆக விளங்கிடுவாய்!
தெள்ளு கலைத்தமிழ் வாணி! நினக்கொரு
விண்ணப்பம் செய்திடுவேன்,
எள்அத் தனை பொழுதும் பயன் இன்றி
இராதென்றன் நாவினிலே
வெள்ளம் எனப் பொழி வாய்;சக்தி வேல்சக்தி
வேல், சக்தி, வேல், சக்தி வேல்! 5

*–மகாகவி பாரதியார் –*

# மஹேஸ்வரி தாயே !

பூரணி பூர்ண மஹேஸ்வரி தாயே
புவனேஸ்வரி கதி நீயே அம்மா
காரணி ஜீவோத் தாரணியே – ஜீவ
நாயகியே மோக்ஷ தாயகியே – அம்மா

அரனருளாகவே ஐந்தொழில் புரிந்திடும்
ஆதிபராசக்தி நீயே அம்மா
வரதாயகி சுத்த கௌரிமனோகரி
வாசாம கோசரி நீயே அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோகத்தைக் கொன்றுவிடு !

மோகத்தைக் கொன்றுவிடு – அல்லாலென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு – அல்லாலதில்
சிந்தை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு – அல்லாலென்றன்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத்திருந்துலகம் – இங்குள்ளன
யாவையும் செய்பவளே!

பந்தத்தை நீக்கிவிடு – அல்லாலுயிர்ப்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு – அல்லாலிதைச்
செத்தவுடலாக்கு
இந்தப் பதர்களையே – நெல்லாமென
எண்ணி இருப்பேனோ?
எந்தப் பொருளிலுமே – உள்ளே நின்று
இயங்கி இருப்பவளே!

உள்ளம் குளிராதோ – பொய்யானவை
ஊன மொழியாதோ?
உள்ள முருகாதோ – அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ?
வெள்ளக் கருணையிலே – இந்நாய்சிறு

வேட்கை தவிராதோ?
விள்ளற்கரியவளே – அனைத்திலும்
மேவி இருப்பவளே!

–மகாகவி பாரதியார்–

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்பன !

நல்லதோர் வீணைசெய்ததே – அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி , சிவசக்தி – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ, இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே!
சொல்லடி சிவசக்தி! – நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

விசையுறு பந்தினைப் போல் – உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல் கேட்டேன்.
நசையறு மனம் கேட்டேன் – நித்தம்
நவம்எனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்.
தசையினைத் தீசுடினும் – சிவ
சக்தியைப் பாடும்நல் அகம்கேட்டேன்
அசைவறு மதி கேட்டேன் – இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?

– மகாகவி பாரதியார்

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேச முத்துமாரி!

தேடி உன்னைச் சரணடைந்தேன் தேச முத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்ட வரம் தருவாய்

பாடியுனைச் சரணடைந்தேன் பாசமெல்லாம் களைவாய்
கோடி நலம் செய்திடுவாய் குறைகள் எல்லாம் தீர்ப்பாய்!

எப்பொழுதும் கவலையிலே இணங்கி நிற்பான் பாவி
ஒப்பியுனது ஏவல் செய்வேன் உனதருளால் வாழ்வேன்!

சக்தியென்று நேரமெல்லாம் தமிழ்க்கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்தும் தீரும்!

ஆதாரம் சக்தி என்றே அருமறைகள் கூறும்
யாதானுந் தொழில் புரிவோம் யாதுமவள் தொழிலாம்!

துன்பமே இயற்கை என்னும் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம் யாவும் அவள் தருவாள்!

நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்!

– *மகாகவி பாரதியார்*

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி!

உலகத்து நாயகியே – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
உன்பாதம் சரண்புகுந்தோம் – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ–
கலகத் தரக்கர்பலர் – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ–
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் – எங்கள் முத்து
மாரியம்மா , எங்கள் முத்து மாரீ –
பலகற்றும் பலகேட்டும் – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
பயனொன்று மில்லையடி – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
நிலையெங்கும் காணவில்லை – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
நின்பாதம் சரண்புகுந்தோம் – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –

துணிவெளுக்க மண்ணுண்டு – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
தோல்வெளுக்கச் சாம்பருண்டு – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
மணிவெளுக்கச் சாணையுண்டு – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
மனம்வெளுக்க வழியில்லை – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
பிணிகளுக்கு மாற்றுண்டு – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
பேதமைக்கு மாற்றில்லை – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
அணிகளுக்கொ ரெல்லையில்லாய் – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ –
அடைக்கலமிங் குனைப்புகுந்தோம் –எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை வேட்கை!

அன்னை என்றதுமே என் நெஞ்சில்
ஆர்வம் பெருகுதம்மா – என்
சின்னஞ் சிறு விழிகள் உன்னைத்
தேடித் திரிகுதம்மா!

உதய முகம் காண என் மனம்
உன்மத்தம் கொள்ளுதம்மா – ஞானக்
கதிர் விழிக் கடலில் ஆடக்
கட்டற்றுத் துள்ளுதம்மா!

செங்கதிர்ப் பூங்கரங்கள் தீண்டும்
திவ்ய சுகம் பெறவே – என்
சிந்தை உடலனைத்தும் – ஒன்றாய்த்
தேடித் துடிக்குதம்மா!

இன்பப் பசியெடுத்தே உள்ளம்
ஏங்கித் தவிக்குதம்மா – உன்
அன்பு வளர்த்தனத்தால் அருள்
அமுதைப் பருக்கிடம்மா!

மாய்கை விளையாட்டில் நெஞ்சம்
மூழ்கிக் கிடக்கையிலே – உன்
தூய குரலெழுந்தே என்னைத்
தொட்டிழுத்திட்டதம்மா!

ஈன்றவளே வெறுத்தால் சேய்க்கு
ஏது கதி புவியில் – ஜகம்
ஈன்ற தயாபரியே ஏழைக்
கிரங்கியருள்வாயம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே பகவதி !

எங்கணும் விளங்கும் மஹேஷ்வரி
மங்களாங்கி மாதங்கி நமோ நமோ
பங்கஜாட்சி பரமேஷ்வரி நமோ – பராசக்தி

அங்குச பாச சூலதாரிணி
சிங்க வாஹனம் மீதே ஆரோஹணி
சங்கரியிரங்காய் மனோஹரி – ஜெகன்மாதா

சோக நாசினி சுயம்பிரகாசினி
ஈசநேசினி இதயவாசினி
யோகதாரணி உலகரட்ஷணி – உமாதேவி

அன்னபூரணி அமிர்த வர்ஷினி
நன்னகர் கன்யாகுமரியில் மேவிய
அன்னையே பகவதி அம்மையே – அருள் தாராய்.

❊❊❊

# தில்லையாட்டக்காரி!

தில்லையாட்டக்காரி நீ செய்யடி ஓர் மாயம்
எல்லையற்ற இன்பம் இங்கு யாவருக்கும் வேண்டும்
கல்லையொத்த மனமே உருகி கானம் பொழிய வேண்டும்
இல்லையென்ற சொல்லே இனி இல்லையாக வேண்டும்!

சொல்லை இனிமையாக்கி வாழ்வைத் தூய கீதமாக்கி
அல்லைப் பகலை நினையா நெஞ்சம் அமுதமயமேயாக்கு
வில்லை விடத்தை அஞ்சா உணர்வில வீர சாந்தமூட்டு
முல்லைக் கமலம் போலே உனக்கு முழுதும் உரிமையாக்கு!

கல்லைப் போல உறுதி நல்ல கனிமரம் போற் பொறுமை
புல்லைப் போலப் பணிவு நல்ல நாயைப் போல நன்றி
வல்ல மனிதர் தம்மை ஐந்தும் வாய்த்திட வேண்டுமடி
தில்லையாட்டக்காரி நீ செய்யடி ஓர் மாயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை சக்தி வருகிறாள் !

வருகிறாள் வருகிறாள் அன்னை சக்தி வருகிறாள்
வருகிறாள் வருகிறாள் ஆதி சக்தி வருகிறாள்!

பாவமெல்லாம் தீர்ப்பதற்கு பராசக்தி வருகின்றாள்
பக்தர்களைக் காப்பதற்கு பத்ரகாளி வருகிறாள்!

இன்னல் எல்லாம் தீர்ப்பதற்கு இச்சா சக்தி வருகிறாள்
கீர்த்தியோடு புகழ் வழங்கிட கிரியா சக்தி வருகிறாள்!

ஞான மழையைப் பொழிவதற்கு ஞான சக்தி வருகிறாள்
நம்பும் நம்மைக் காப்பதற்கு தேவி ஓடி வருகிறாள்!

சமயபுரத்தில் வாழும் அம்மை சாந்தி வழங்க வருகிறாள்
சஞ்சலங்கள் தீர்ப்பதற்கு சாம்பவியும் வருகிறாள்!

சோட்டாணிக்கரை பகவதியும் சோகம் தீர்க்க வருகிறாள்
சொர்க்க போக வாழ்வை வழங்கத் தேவி ஆடி வருகிறாள்!

மாயை விலகி மனம் திருந்த மகா தேவி வருகிறாள்
மாதுளம் பூ மேனி கொண்ட மகா காளி வருகிறாள்!

மோகம் எல்லாம் மறைவதற்கு மூகாம்பிகை வருகிறாள்
முக்தி நலம் தந்திடவே சக்தி ஓடி வருகிறாள்!

பஞ்சம் ஓடப் பாவம் ஓடப் பஞ்சபாணி வருகிறாள்
பாம்பணிந்த பரமனோடு பார்வதியாள் வருகிறாள்!

மகிடன் தலையின் மீதில் ஏறி துர்க்கையாக வருகிறாள்
மலைமகளாய் கலைமகளாய் அலைமகளாய் வருகிறாள்!

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பராசக்தி கீர்த்தனை!

*ராகம் : ஹம்ஸத்வனி* *தாளம் : ஆதி*

### பல்லவி

பராசக்தி ஜனனி – எமை
பரிபாலனைபுரி பர்வத குமாரி(பரா)

### அனுபல்லவி

ஸுராஸுரர் பணி ஸரோஜ சரணே
ஸுந்தரி நின் சரணாம்புஜம் நம்பினோம் (பரா)

### சரணம்

சங்கரி க்ருபாகரி வராபயகரி எமை
யாதரி ஹரி ஸோதரி (பரா)

தாயே பரசிவ ஜாயே மன இருள்
மாயை யகல அருள்வாயே மாயே (பரா)

கோர மஹிஷ ஸம்ஹாரிணி ச்யாமள
ரூபிணி ஸிம்ஹ வாஹினி மஹேச்வரி (பரா)

**– பாபநாசம் சிவன்–**

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பர்வத இராஜகுமாரி!

ராகம் : செஞ்சுருட்டி, ஸிந்துபைரவி தாளம் : ஏகம் (அ) குறிஞ்சி

பர்வத ராஜ குமாரி பவானி
பஞ்ஜய க்ருபயா மம துரிதானி /

தீனதயாபரி பூர்ண கடாக்ஷி
த்ரிபுர ஸுந்தரி தேவி மீனாக்ஷி //

ஆரணி நாரணி காரணி நீலி
பூரணி யோக புராதன சீலி /

சங்கர நாயகி சாந்த மஹேச்வரி
ஸுந்தரி வேத விதக்ஷிணி கௌரி //

அம்ப சிதம்பர நாத நடேச்வரி
அம்பண காதலி தேவி ஸர்வேச்வரி /

சம்பு மோஹினி சாந்த தயாமணி
துக்க பேதினி சோக நிவாரணி //

பஞ்ச தசாக்ஷர பஞ்ஜர வாஸினி
குஞ்சித பாத மஹேச வினாஸினி/

காஞ்சி காமாக்ஷி காசி விசாலாக்ஷி
காருண்ய லாவண்ய அகிலாண்டேச்வரி //

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மங்களாம்பிகை!

இராகம்: ஆனந்தபைரபி தாளம் : ரூபகம்

## பல்லவி

ஈச்வரி ஜகதம்பாநின் இணையடிதுணையென நம்பினேன்
எப்படியோ உனதருளென் கற்பகமே தாயே (ஈச்வரி)

## அநுபல்லவி

வாசவன் போற்றுங் குடந்தை நகர்
வாழும் மனோன் மணியான
தேசமார்கும் பேசரிடம் வாழ
செல்விஜய மங்கள நாயகி (ஈச்வரி)

## சரணங்கள்

1. உன் சந்நிதிகண் டாலவர்க்கு
ஒரு சஞ்சல முண்டோ
உலகினில் கஞ்சன் பணியும்
செஞ்சரணியே மஞ்சு பாஷிணி
தஞ்ச மென்றடுத்த பேரை
அஞ்சலென் றாதரித்துக் காக்கும்
ரஞ்சித நவரஸ புஞ்சமே
வஞ்சியர் மோகிநி அஞ்சுகமே (ஈச்வரி)

2. உன்தனை நான் அனுதினமு மென்
சிந்தையில் நினைந்து நினைந்து
வந்தனை புரிந்தும் இன்னமும்
இந்தத் தாமதம் ஏனம்மா
கொந்தலர் குழலியே நினைத்தவர்
அந்தரச் சமயங் கடைக்கண்பார்
மந்தரநிகர் முலை யாளே நி
ரந்தரமுல கெங்கும் நிறைந்திடும் (ஈச்வரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ட லக்ஷ்மி ஸ்தோத்திரம்!

### ஆதிலக்ஷ்மி

ஸுமநஸ வந்தித ஸுந்தரி மாதவி
சந்த்ர ஸஹோதரி ஹேமமயே
முநிகண மண்டித மோக்ஷபிரதாயினி
மஞ்ஜுள பாஷிணி வேதநுதே
பங்கஜ வாஸிநி தேவஸு பூஜித
ஸத்குண வர்ஷிணி சாந்தியுதே
ஜயஜய ஹே மதுஸூதல காமினி
ஆதிலக்ஷ்மீ ஸதா பாலயமாம்.

### தான்யலக்ஷ்மி

அயிகலி கல்மஷ நாசிநி காமிநி
வைதிக ரூபிணி வேதமயே
க்ஷீரச முத்பவ மங்கள ரூபிணி
மந்த்ர நிவாஸிநி மந்த்ரநுதே
மங்கள தாயிநி அம்புஜ வாஸிநி
தேவ கணாச்ரித பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதநி காமிநி
தான்யலஷ்மி ஸதா பாலயமாம்.

### தைர்யலக்ஷ்மி

ஜயவர வர்ணி நீவைஷ்ணவி பார்கவி
மந்த்ர ஸ்வரூபிணி மந்த்ரமயே
ஸுரகண பூஜித சீக்ர பலப்ரத
ஜ்ஞான விகாஸிநி சாஸ்த்ரநுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவபய ஹாரிணி பாபவிமோசநி
சாது ஜநாச்ரித பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதந காமிநி
தைர்யலக்ஷ்மீ ஸதா பாலயமாம்.

## கெஜலக்ஷ்மி

ஜயஜய துர்கதி நாசினி காமிநி
ஸர்வபல ப்ரத சாஸ்த்ரமயே
ரதகஜ துரகபதாதி ஸமாருத
பரிஜன மண்டித லோகநுதே
ஹரிஹர ப்ரும்மஸூ பூஜித ஸேவித
தாப நிவாரணி பாதயுதே
ஜயஜய ஹேமது ஸூதெந காமிநி
கெஜலக்ஷ்மி ரூபேண பாலயமாம்

## ஸந்தான லக்ஷ்மி

அயிகக வாஹிநி யோஹிநி சகரிணி
ராக விவர்த்திநி ஜ்ஞானமயே
குணகண வாரிநி லோக ஹிதைஷிணி
ஸ்வரஸப்த பூஷித கானதுதே
ஸகலு ஸூராஸூர தேவ முநீச்வர
மாநவ வந்திக பாதயுதே
ஜயஜய ஹேமது ஸூதந காமிநி
ஸந்தான லக்ஷ்மீது பாலயமாம்.

## விஜயலக்ஷ்மி

ஜய கமலாஸநி ஸத்கதி தாயிநி
ஜ்ஞான விகாஷிநி கானமயே
அனுதின மாச்சித குங்கும தூஸரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஷீத வாஸித வாத்யனுதே
கனகதாரா ஸ்துதி வைபவ வந்தித
சங்கர தேசிய மான்ய பதே
ஜயஜய ஹேமது ஸூதந காமிநி
விஜயலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## வித்யா லக்ஷ்மி

ப்ரணத ஸூரேச்வரி பாரதி பார்க்கவி
சோக விநாசநி ரத்னமயே
மணிமய பூஷீத கர்ணவிபூணஷ
சாந்தி ஸமாவ்ருத ஹாஸ்யமுகே
நவநிதி தாயிநி கலிமல ஹாரிணி
காமித பலப்ரத ஹஸ்தயுதே
ஜயஜய ஹேமது ஸூதன காமிநி
வித்யா லக்ஷ்மி ஸதா பாலயமாம்.

## தன லக்ஷ்மி

திமிதிமி திந்திமி திந்திமி திந்திமி
துந்துபி நாதஸூ பூர்ணமயே
குமகும குங்கும குங்கும குங்கும
சங்க திநாத ஸூவாத்யநுதே
வேத புராணே திஹாஸ ஸூபூஜித
வைதிக மார்க ப்ரதர்சயுதே
ஜயஜய ஹேமது ஸூதந காமிநி
தனலக்ஷ்மி ரூபேண பாலயமாம்.

❊❊❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்திரு கல்யாணி!

இராகம் : பூபாளம்  ஆ: சரிகாபதச்ா
தாளம் : சாய்ப்பு  அ: ச்நிதாபகாரிச
15வது மேளத்திற் பிறந்தது.

## பல்லவி

எழுந்திரு கல்யாணி ஓம்சுத்த சத்தியெம்
இதயத்தில் உபசாந்த உதயத்தைத் தூண்டி — எழுந்திரு

## அநுபல்லவி

அழுந்திருள் ஒழிந்திடச் செழுஞ்சுடர் பொழிந்தெங்கள்
ஆதாரக் கமலத்தின் மீதேறிப் பொழிந்திட — எழுந்திரு

## சரணங்கள்

விண்முகங் கனிந்தது விடிந்தது காலை
வீங்கிருள் அகன்றது தூங்கின குமுதம்
தண்முகம் அருணத் தழல்முகம் ஆனது
தடங்களில் விரிந்தன தாமரை யெல்லாம் — எழுந்திரு

2. மண்முகம் புதுப்பசும் பொன்முக மாகிட
மங்கலச் செங்கதிர் மலர்ந்தது வானில்
எம்முகம் பார்த்தருள் புரிவதற் கெண்ணி
எழுந்தருள் இத்தினம் இன்பக் கொழுந்தே — எழுந்திரு

3. ஆர்வமென்னும் சேவல் கூவுதுன் அருளை
அன்புள்ளம் பாடுதுன் ஆடலின் பொருளைக்
கார்வரக் காணும் கலாபத்தைப் போலுன்
கருணை முகங்கண்டு களித்ததெங் கண்ணே — எழுந்திரு

4. சூரிய சோதிசேர் தாரகை போலுன்
சுடரினில் ஒன்றாகுஞ் சுகநிலை தருவாய்
பாரெல்லாம் உன்முகம் பார்த்திட அருளாய்
பரம சிவானந்தம் பாலிக்குந் திருவே. — எழுந்திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள வேண்டும்!

ஆ: ஸரிகமபதஸ்　　　　இராகம் : சாருமதி
அ: ஸ்நிதமகஸ　　　　தாளம் : ரூபகம்

### பல்லவி

அருள வேண்டும் தாயே
அங்கயற்கண்ணி – நீயே எனக்கு

### அனுபல்லவி

பொருளும் புகழும் பொருந்தி வாழ
புவியில் நான் தலை சிறந்து வாழ　அருள

### சரணம்

கலைகள் கற்கவும் கற்பனை செய்யவும்
காலங் கடவாமல் கருத்தைத் திருத்தவும்
உலகிலே நல்ல உண்மைகள் பேசவும்
உனை நினைக்கவும் உறுதியாய் வாழவும்,அருள

---

# அபிராமி அம்மைப் பதிகம்!

சகல செல்வங்களுந் தரும் இமய கிரிராச
தநயைமா தேவி நின்னைச்
சத்யமாய் நித்யமுள் ளத்தில்து திக்கும் உத்
தமருக் கிரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம் வலி துணிவுவாழ் நாள் வெற்றி
ஆகும்நல் லூழ்நு கர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப் பாய்;
சுகிர்தகுண சாலிபரி பாலிஅநு கூலிதிரி
சூலிமங் களவி சாலி
மகவுநான்; நீ தாய் அளிக்கொணாதோ மகிமை
வளர் திருக் கடவூரில் வாழ்
வாமிசுப நேமிபுகழ் நாமிசிவ சாமிமகிழ்
வாமிஅபி ராமி உமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனனி ஜனனி!

ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ ... /
ஜெகத் தாரணி நீ பரிபூரணி நீ ///
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

ஒரு மான் மழுவும் சிறு பூந்திரையும்
சடைவார் குழலும் விடை வாகனமும் //

கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே
நின்ற நாயகியே இட பாகத்திலே //

ஜெகன் மோகினி நீ சிம்மவாகினி நீ ///
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜெகத் தாரணி நீ பரிபூரணி நீ

சதுர் வேதங்களும் பஞ்சபூதங்களும்
சன் மார்க்கங்களும் சப்த தீர்த்தங்களும் //

அஷ்ட யோகங்களும் நவ யாகங்களும்
தொழும் பூங்கழலே மலை மாமகளே //

அலை மாமகள் நீ கலை மாமகள் நீ ///
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜெகத் தாரணி நீ பரி பூரணி நீ

ஸ்வர்ண ரேகையுடன் சுயமாகி வந்த
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே //

பல தோத்திரங்கள் தர்ம சாஸ்திரங்கள்
பணிந்தேத்துவதும் மணி நேத்திரங்கள் //
சக்தி பீடமும் நீ ... /////
சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ (ஜனனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு அகவல்!

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன் பிறப்பே
சோதி மணி விளக்கே சீதேவி பொன் மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாட்சி தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சுத்திரி போட்டு
குளம் போலவே எண்ணெய் விட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு என்றன் குடி விளங்க
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறையப் பாற் சுவை தாருமம்மா
புகழுடம்பைத் தாருமம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலும் என் அண்டையில் நில்லுமம்மா
அன்னையே அருந்துணையே அருகிருந்து காருமம்மா
வந்த வினையகற்றி மகா பாக்கியம் தாருமம்மா
தாயாரே உன்றன் தாளடியில் சரணடைந்தேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்
திருவிளக்குருவாய் திகழ்ந்திடும் தேவி
திருமிகும் லலிதே திருவருள் புரிவாய் !

# கற்பூர ஆரத்தி!

கற்பூர மங்கள ஜோதி நமோ நம
கருணைச் சுடரே ஒளியே நமோ நம
சொற்பதம் கடந்த சுடரே நமோ நம
சொல்லில் விளங்கும் பொருளே நமோ நம
தற்பரமான தயவே நமோ நம
ஸர்வ வல்லமை உடையாய் நமோ நம
அற்புதமெந்தன் உளத்த விசமர்ந்த
அருட்பெருஞ் ஜோதி இறைவா நமோ நம!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்து விளக்குப் பாடல்!

குத்து விளக்கினை ஏற்றி வைத்தோம் – இந்தக்
குவலயத்தில் எமைக் காத்திடுவாய்
எத்துனை இடர் வரினும் ஏற்றிடுவோம் – இனி
எம் துணை உலகினில் நீயல்லவோ (குத்து விளக்கு)

சொத்து சுகங்களும் நிலைப்பதுண்டோ – இந்த
மானிட ஜென்மமும் நிலைப்பதுண்டோ
சுத்த புத்தியுடன் உனைத் தொழுதால் – வாழ்வில்
மெத்தப் பலன் வரும் உண்மையன்றோ (குத்து விளக்கு)

நித்தம் நித்தம் உனைத் தொழுது வந்தால் – வாழ்வில்
புத்தம் புதுச் சுவை பெருகுமன்றோ
மாந்தர்கள் போற்றிடும் நாயகியே – அருள்
மாங்காடு வாழ்ந்திரு காமாட்சி.

❁❁❁

மங்கலப் பொருளாம் விளக்கிதுவே
மாதர் ஏற்றும் விளக்கிதுவே
போக்கும் மனத்தால் நித்தமுமே
போற்றி வணங்கும் விளக்கிதுவே
இருளை அகற்றும் விளக்கிதுவே
இன்பம் ஊட்டும் விளக்கிதுவே
அருளைப் பெருக்கும் விளக்கிதுவே
அன்பை வளர்க்கும் விளக்கிதுவே
இல்லம் தன்னில் விளக்கினையே
என்றும் ஏற்றித் தொழுதிடவே
பலவித நன்மை பெற்றிடலாம்
பாரில் சிறந்தே வாழ்ந்திடலாம்
விளக்கில் ஏற்றும் ஜோதியினால்
விளங்காப் பொருளும் துலங்கிடுமே
விளக்கில் விளங்கும் ஜோதிதனை
விமலன் என்றே உணர்ந்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்!

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடாணனாய மங்களம்
ரகுவராய மங்களம் வேணுக்ருஷ்ண மங்களம்
சீதாராம மங்களம் ராதாக்ருஷ்ண மங்களம்
அன்னை அன்னை அன்னை அன்னை அன்பினுக்கும் மங்களம்

ஆதி சக்தி அம்பிகைக்கு அனந்த கோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் எங்கள் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சித்சிவைக்கு மங்களம்
நாமகீர்த்தனம் பரந்துநானிலம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெலாம் விளங்கவும்
ஞான தீபமேற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்
தர்ம சக்தி வாழ்க வென்று சந்ததம் கொண்டாடுவோம்!

❉❉❉

ஓம் ஸ்வஸ்தி ப்ரஜாப்ய பரிபால யந்தாம்
ந்யாயேன மார்கேண மஹீம் மஹீசா
கோப்ராஹ்மணேப்ய ஸுபமஸ்து நித்யம்
லோகா ஸமஸ்தாஸுகினோ பவந்து

❉❉❉



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *வாழ்த்து!*

உலகெலாம் அன்பு மேவி ஒருகுலமாக வாழ்க
கலகமும் துயரும் வீழ்க கருணையும் களிப்பும் பொங்க

நலமெலாம் விளைய ஞான ஞாயிறு பொழிய நாளும்
இலகுவாய் சுத்த ஜோதி இறைவனே போற்றி போற்றி!

ஒள்ளியதுரிய வானில் ஓங்கிடும் சோதி வாழ்க
தெள்ளியருள்ளே அன்பாய் திகழ் பரஞ்சோதி வாழ்க!

உள்ளமே தில்லையாக ஓமொலி இசையதாக
துள்ளி நன் நடனமாடும் தூய சிற்சோதி வாழ்க.!

❋ ❋ ❋

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

ஓம் நமப் பார்வதி பதயே - அரஹர மஹாதேவா
தென்னாடுடைய சிவனே போற்றி -
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
சிற்சபேசா - சிவ. சிதம்பரம்
இன்பமே சூழ்க - எல்லோரும் வாழ்க.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை!

எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இறைவனே!

இதோ எங்கள் பணிவான விண்ணப்பத்தை
உம் திரு முன்னர் சமர்ப்பிக்கின்றோம்.

நாங்கள் உண்ண உணவும், அருந்த நீரும், உலவப் பூமியும்,
சுவாசிக்கக் காற்றும், காணச் சூரிய சந்திர ஒளியும்,
எண்ண மனமும், ஏற்றிப் போற்ற வாயும், வணங்கச் சென்னியும்
கூப்பித் தொழக் கரங்களும் அளித்து,
எங்களுக்கு வாழ்வளித்த வள்ளல் பெருமானே,

உமது ஒப்பற்ற கருணைக்கு, இதோ எங்கள் நன்றியறிதலான
வந்தனை வழிபாட்டை அன்புடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

அருட்பெருஞ் ஜோதி இறைவனே,
உனது தனிப் பெருங் கருணையினால் எங்கும்
அமைதியும் அன்பும் அறனும் நிலவி,
எல்லோரும் நல்லோராய் வாழ்ந்து இன்புற்றிருக்க
திருவருள் புரியுமாறு மனமாரப் பிரார்த்திக்கின்றோம். !

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

❊❊❊


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed by Unie Arts (Pvt) Ltd., TEl : 2330195